விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 15 வெள்ளிக்கிழமை (28.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 100




## ‘பிரபாகரன்’ படத்தை வெளியிட தயாரிப்பாளர்கள் சங்கம் எதிர்ப்பு

(சென்னை)

தமிழர்களை அவமானப்படுத்தும் வகையில் சிங்களப் படம் உருவாக்கப்பட்டுள்ளது என்று தமிழ் நாடு திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் இராம.நாராயணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

‘பிரபாகரன்’ என்ற சிங்கள மொழித் திரைப்படத்தை நேற்றுப் பார்த்த பின்னர் ஊடகவியலாளரிடம் அவர் கூறியதாவது,

இந்தப் படம் கலர்ப்படம் அல்ல. கலப் படம். படத்தின் தலைப்பே சரியில்லை. தமிழர்களை அவமானப்படுத்தக்கூடியது. திரையிடுவதை வெளியிடுவது பற்றி யோசித்தே முடிவு செய்வோம் என்றார் அவர்.

நடிகர் சத்தியராஜ் கருத்துத் தெரிவிக்கையில், தமிழர்களை (10ஆம் பக்கம் பார்க்க)

## ‘பிரபாகரன்’ திரைப்பட இயக்குநர் நேற்றுமுதல் சாகும்வரை உண்ணாவிரதம்

(கொழும்பு)



சென்னையில் ஜெமினி ஸ்ரூடியோவுக்கு முன்பாக கடந்த செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்களினால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் இயக்குநர் துஷாரா பீரிஸ் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு நேற்றுக்காலை முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றினையும் ஆரம்பித்திருப்பதாக அறிவித்திருக்கின்றார். (10ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் ஒப்பந்தம் செய்யும் திட்டமெதுவும் அரசிடம் இல்லை

## பேசத் தயார் என்கிறார் அமைச்சர் ஜெயராஜ்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராகவுள்ள அதேவேளை அவர்களுடன் மீண்டும் ஒரு போர் நிறுத்த உடன்படிக்கையைச் செய்யத் தயாரில்லை என அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த உடன்படிக்கையை செய்து சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் செல்ல அரசாங்கம் தயாராக உள்ளதா எனக் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (10ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் கட்சிகளிடையே ‘சின்ன’ப் பிரச்சினை

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து பொதுவான சின்னமொன்றின் கீழ் போட்டியிடச் செய்வதற்கான பேச்சுக்கள் நடைபெற்று வருகின்ற போதிலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இக்கோரிக்கைக்கு இணங்கவில்லை என அக்கட்சியின் அதி உயர் பீட உறுப்பினர் எம்.எல்.ஏ.என்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பள்ளிவாயல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் மயோன் முஸ்தபா தலைமையிலான உம்மா கட்சி ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் முஸ்லிம் கட்சிகளுக்கிடையிலான கூட்டமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், நு.ஆ. ஆகிய முஸ்லிம் கட்சிகள் கலந்து கொண்டன.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பொதுவான சின்னமொன்றின் கீழ் போட்டியிட (10ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் ஆதரவைப் பெற இலங்கை அரசு தீவிர முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தமக்கு ஆதரவைத் திரட்டிக் கொள்ளும் முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் தீவிரம் காட்டியுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா.உறுப்பு நாடுகளை சந்திப்பதற்கு இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழுவினர் நியூயோர்க் சென்றுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்புரிமையைக் கொண்டிருக்கும் 30 நாடுகளுக்கான பிரதிநிதிகளையும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் மற்றும் ஆயுத மோதல்கள் தொடர்பான விசேட பிரதிநிதி ராதிகா குமாரசுவாமியையும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழுவினர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து இந்தச்சந்திப்பில் விளங்கப்படுத்தப்படவிருப்பதுடன் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மீண்டும் உறுப்புரிமையைப் பெறுவதற்கான ஆதரவும் (10ஆம் பக்கம் பார்க்க)

## இரணைமடுவில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

கிளிநொச்சியில் இனம் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக விமானப்படை அறிவித்துள்ளது.

இரணைமடு கிழக்கு கல்மடுப் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் பயிற்சி நிலையம் மீது நேற்றுக்காலை 6.15 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் அதற்கு பாரிய சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் விமானப்படை பேச்சாளர் விங்கொமாண்டர் அன்ரூ விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இதனை விட கிளிநொச்சி வடமேற்குப் பகுதியில் (10ஆம் பக்கம் பார்க்க)




சென்னையிலுள்ள இலங்கைத் துணைத்தூதரகத்தை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோரைப் படத்தில் காணலாம்.

## சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தை அகற்றக்கோரி நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

### பெருமளவான ஆதரவாளர்கள் பங்கேற்பு

(சென்னை)

தமிழகத்தின் தலைநகர் சென்னையிலுள்ள இலங்கைத் துணைத்தூதரகத்தை அகற்ற வலியுறுத்தி தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை விக்ரோரியா நினைவரங்கம் முன்பாக நேற்று மாலை 5 மணியளவில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ், தொல்.திருமாவளவன், இயக்குநர் சீமான், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் வேல்முருகன் மற்றும் ஆயிரக்கணக்கான தமிழின உணர்வாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈழத்தமிழ் மக்களுக்கு தமிழக அரசை உதவக்கோரும் ஆதரவான கோஷங்களும் எழுப்பப்பட்டன. (ச-5)

## யாழ்.மண்ணில் முதன்முறையாக

# இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போர் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையிலான துடுப்பாட்ட வரலாற்றில் புதுயுகமாக நாளை ஆரம்பமாக இருக்கிறது 'இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போர்' யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு பிரபல்யம் பெற்ற இந்துக் கல்லூரிகளான யாழ்.இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையே நீண்ட காலமாகப் பேணப்பட்டு வரும் நல்லுறவை வலுப்படுத்தும் முகமாக இத்துடுப்பாட்டப் போட்டி நடைபெறுகிறது.

வருடந்தோறும் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான துடுப்பாட்டப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் இறுதியாக மோதிக் கொள்ளும் இப் போட்டியை 'இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போர்' என்ற பெயரில் மிக விமரிசையாக நடத்த இரு கல்லூரி அதிபர்களும் இரு கல்லூரிச் சமூகமும் விரும்பியதன் பலனாக நாளையும் நாளை மறுதினமும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் வரலாற்றுப் பதிவை ஏற்படுத்தும் முதலாவது போட்டி நடைபெறவுள்ளது.

வருடந்தோறும் 'இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போர்' நடாத்தும் உரிமையை இரு பாடசாலைகளும் மாறிமாறிப் பெற்றுக் கொள்ளும். அதனடிப் படையில் 2009 ஆம் ஆண்டுக்கான போட்டி யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்படும்.

**இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போரில் பங்குபெறவுள்ள இரு அணிவீரர்களும் இப் பருவகாலத்தில் தங்களது சிறப்பான ஆட்டங்களை வெளிப்படுத்தி வந்துள்ளனர். அந்த வகையில் இரு அணி வீரர்களையும் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றோம்.**

### கொக்குவில் இந்துக் கல்லூரி துடுப்பாட்ட அணி – 2008



**இருப்பவர்கள் ( இடமிருந்து வலம்)**

எஸ்.கோகுலன் (பயிற்றுநர்), எஸ்.உமாசுதன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர், எம்.வேலாயுதபிள்ளை (உப அதிபர்), எஸ்.வி.மகேந்திரன் (பிரதி அதிபர்), இ.வாகீஷ்-(அணித் தலைவர்), ஏ.அகிலதாஸ் (அதிபர்), சி.வல்லவக்குமரன் (உப தலைவர்), கே.மோகனதாஸ் (பிரதி அதிபர்), திரு.ஐ.சசிகுமார் (விளையாட்டுத்துறை ஆசிரியர்), ஆர்.பிரதீபன் (உதவிப் பயிற்றுநர்), ஆர். ஜெகதீஸ்வரன் (அணிப் பொறுப்பாசிரியர்),

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)**

பா.ரெனிசன், ச.கோபிகன், வி.ஜனார்த்தனன்,தே.லக்ஷன், ச.ஜனுகுலன், இ.நிருஜன், பி.நிதர்ஷன், கு.நிரோஜன், இ.ஏரகன், ஸ்ரீ.மயூரன், சி.உத்தமகுமரன், கு.ஜனுதாஸ், த.துவாரகன், சி.நிரோஜன்.

### யாழ்.இந்துக் கல்லூரி துடுப்பாட்ட அணி – 2008



**இருப்பவர்கள் ( இடமிருந்து வலம்)**

சண் தயாளன் (அணி ஆலோசகர்), பா.ஜெயரட்ணராஜா (அணிப் பொறுப்பாசிரியர்), பொ.சிறீஸ்கந்தராஜா (உப அதிபர்), க.அஜித் (உப தலைவர்), வீ. கணேசராஜா (அதிபர்), தி.கௌசிகன் (அணித் தலைவர்), பொ.மகேஸ்வரன் (பிரதி அதிபர்), ச.நிமலன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), ந.சிவராஜா (பயிற்றுநர்).

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)**

சி.செந்தூரன், ரா.அருண்ராஜ், சு.பிரசன்னா, சோ.யாதவன், பி.கோசிகன், பா.சங்கீதன், செ.பவசுதன், ரா.நிருஜன், கெ.டிலான், ந.சுதாகரன், அ.பிரியதர்ஷன், த.சிந்துஜன், சி.மயூலக்ஷன், இ.சிந்துஜன்.

ஆனந்தன்

---

## 16 மாதங்களின் பின் தமிழ்ப் பெண் விடுதலை

(கொழும்பு)

விடுதலைப்புலிச் சந்தேக நபர் எனக் கைது செய்யப்பட்ட தமிழ்ப் பெண் ஒருவர் 16 மாதங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் திகதி விடுதலைப்புலிகளுடன் தொடர்பிருப்பதாகக் கூறி சுகந்தி தம்பிராஜா என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார். இவர் 16 மாதங்களாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு நேற்று நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் தங்கியிருந்த ஊடகவியலாளரான பரமேஸ்வரியும் கைது செய்யப்பட்டிருந்தார். எனினும் இவர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தார். (ச–5)

## மா,சீனி, பருப்பு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட கோதுமை மா, சீனி, பருப்பு ஆகியன மாவட்டத்திலுள்ள 24 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குரிய வழங்கற் கட்டளைகளை இன்று மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

ஒரு கிலோ கோதுமை மாவின் விற்பனை விலை 82 ரூபா ஆகும். ஒரு கிலோ சீனியின் விற்பனை விலை 70 ரூபாவாகவும் ஒரு கிலோ பருப்பின் விலை 140 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## தம்மிடமுள்ள சிறுவர் போராளிகளை விடுவிக்க தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் இணக்கம்

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றி அரசியலுக்குள் நுழைந்திருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தம்வசம் இருக்கும் சிறுவர் போராளிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

தற்பொழுது நாங்கள் 20 சிறுவர்களையே எமது அமைப்பில் வைத்துள்ளோம். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தின் உயர் மட்டக் குழு ஒன்று எதிர்வரும் 30 ஆம் திகதி மட்டக்களப்பு வரவுள்ளது.

அரசாங்கத்துடன் இணைந்து அவர்களுக்குப் புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். அதன் பின்னர் அந்தச் சிறுவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் எந்தவொரு அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். அவர்களின் உரிமைகளுக்கு நாங்கள் மதிப்பளிப்போம். எனவே உணவு மற்றும் பாதுகாப்பு உட்பட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம் எனக் கொழும்பு ஊடகம் ஒன்றுடம் அவர் கூறியுள்ளார்.

விடுவிக்கப்படும் சிறுவர்களை சர்வதேச அமைப்புக்களிடம் கையளிக்கத் தாம் விரும்பவில்லை எனத் தெரிவித்த ஆசாத் மௌலானா சர்வதேச அமைப்புக்களிடம் சிறுவர்களைக் கையளித்தால் நீண்ட கால நோக்கில் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்தார்.

யுனிசெவ் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களிடம் கடந்த காலங்களில் சிறுவர்களை நாங்கள் கையளித்திருந்தோம். எனினும் அந்தச் சிறுவர்களின் நீண்ட காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கடமைகளை அந்தச் சர்வதேச நிறுவனங்கள் நிறைவேற்றவில்லை.

குடும்பங்களிடம் திரும்பியனுப்பப்பட்ட சிறுவர்கள் பலருக்குப் போதியளவு கல்வி வசதி, உணவு வசதி என்பன ஏற்படுத்தப்படவில்லை என்பதை நாங்கள் அறிந்து கொண்டிருந்தோம் எனத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஆசாத் மௌலானா அந்த ஊடகத்திடம் மேலும் கூறினார். (எ–5)

## வலி.கிழக்குப் பிரதேச செயலக மகளிர் தின விழா இன்று

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்குப் பிரதேச செயலக மகளிர் தின விழா இன்று காலை 9 மணிக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஜ் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் கோப்பாய் அன்னை திரேசா அமைதி இல்லத்தைச் சேர்ந்த அருட் சகோதரிகள் வலன்ரையின், மாக்கிறற் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் யாழ்ப்பாணம் சுக வாழ்வு நிலைய இயக்குநர் அருட் தந்தை என்.டேமியன், கெயார் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் ஏ.இராஜரட்ணம், நீர்வேலி பவானி ஸ்ரோர் உரிமையாளர் பொன்னையா கிருஷ்ணானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில் வழங்கலும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ–134)

## வர்த்தக நிறுவனங்களை திறப்பதற்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக ஸ்தாபனங்களும் எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 13 ஆம் திகதி வரையுள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும் என்பதுடன் 13 ஆம் திகதிக்குப் பின் சகல ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி சகல வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ச)

## எந்திரவியல் டிப்ளோமா பரீட்சை செங்குந்தாவில்

(யாழ்ப்பாணம்)

எந்திரவியல் டிப்ளோமா, இளமாணிக் கற்கை நெறிக்கான ஆங்கிலத் தரப்படுத்தல் பரீட்சை நாளைக் காலை 10 மணிக்கு கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறும் என இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்.பிராந்திய இயக்குநர் எந்திரி ச.ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

பரீட்சை அனுமதிப் பத்திரத்தில் யாழ்.பிராந்திய நிலையம் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

## சாரணர்களுக்கான சின்னஞ்சூட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் சாரணர்களுக்கான சின்னம் சூட்டு விழா இடம்பெறவுள்ளதாகப் பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (அ)

# இன்று ஒரு தகவல்

## ஏழுவகை மனிதர்கள்

இந்த உலகத்திலே ஏழுவகையான மனிதர்கள் இருப்பதாக டாக்டர் எட்வர்டு பாட்ச் என்பவர் கூறுகிறார். மனோநிலை அடிப்படையில் அவர்களை ஏழு வகையாகப் பிரிக்கலாம் என்கிறார் அவர். அது எப்படித் தெரியுமா?

முதல்வகை-பயந்த குணமுள்ளவர்கள் "...சார்... இவர் மிகவும் பயந்த சுபாவம். வீட்டிலேகூட வாயைத்திறக்க மாட்டார். சாப்பிடும் போது மட்டும்தான் கொஞ்சம் வாயைத் திறப்பார்... என்கிறோமோ-அவர்களெல்லாம் அப்படிப் பட்ட ரகம். இரண்டாவது வகை, சஞ்சலப்படுகிறவர்கள் எதற்கெடுத்தாலும் கலக்கம்-குழப்பம்... இப்படியே காலம் தள்ளுகிறவர்கள் பல பேரைப் பார்த்திருப்பீர்கள். அவர்களெல்லாம் இந்த ரகம். மூன்றாவது வகை, யதார்த்த உலகை மறந்து கற்பனை உலகத்திலே மிதக்கிறவர்கள்.

இளைஞர்கள், கவிஞர்கள் இப்படிப்பலர் இருப்பார்கள். எப்பொழுது பார்த்தாலும் கற்பனை உலகத்திலே மிதந்து கொண்டிருப்பார்கள். கிட்டப் போய், "என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்கள் என்று கேட்டுப் பாருங்கள்! ஓர் அற்ப புழுவைப் பார்ப்பது போல் உங்களைப் பார்ப்பார்கள். அதோ... அந்த வானத்து நிலா என்னை வா என்று கூப்பிடுகிறது. எனக்கு விரைவில் ஒருநாள் சிறகுகள் முளைக்கும். சிறகடித்துப் பறந்து செல்வேன்... என் செல்ல நிலாவைக் கொஞ்சி விட்டுத் திரும்பிவருவேன்" என்பார்கள். "கொஞ்சுவது அப்புறம் இருக்கட்டும்... இப்பொழுது கஞ்சிக்கு வழியைப் பாரடா..." என்றால் அதைக் காதிலேயே வாங்க மாட்டார்கள்.

நாலாவது வகை மனிதர்கள் தனிமை உணர்வு மிக்கவர்கள். இவர்கள் மற்றவர்களோடு சகஜமாக நெருங்கிப் பழகுவதில்லை. தான் உண்டு; தன் வேலை உண்டு என்று போகிறவர்கள். அடுத்த வீட்டிலே குடியிருப்பவர் யார்? என்று கேட்டால் அடுத்த வீடு என்று ஒன்று இருக்கிறதா? என்று கேட்பார்கள். அவர்களிடம் மேற் கொண்டு எதைப் பேசுவது? ஐந்தாவது வகை மனிதர்கள் மற்றவர்கள் செல்வாக்குக்கு உட்பட மறுப்பவர்கள். அடுத்தவர் செல்வாக்குக்கு இவர்கள் ஆட்படமாட்டார்கள்.

"நான் யார் தெரியுமா?" என்றால், அதைத் தெரிந்து கொண்டு எனக்கு என்ன ஆகப் போகிறது என்பார்கள். ஆறாவது வகையினர் எப் பொழுதும் எதிலும் பற்று இல்லாமல் இருப்பவர்கள். இது ஒரு துறவி மனப்பான்மை. இயல்பாகவே சிலர் இப்படி இருப் பதுண்டு. அவர்களுக்கு அதிலும் ஈடுபாடு இருக்காது.

ஏழாவது வகை மனிதர்கள் மற்றவர்களுடைய கவலையை தன்னுடையதாக ஆக்கிக்கொண்டு கவலைப் படுகிறவர்கள். இவர்கள் மகாத்மாக்கள்! தான் வேறு; மற்றவர்கள் வேறு என்ற எண்ணம் இவர்களிடம் இல்லை. அதனாலே மற்றவர்களுக்கு ஒரு துன்பம் ஏற்பட்டால் அதனைத் தன்னுடைய துன்பமாக நினைத்துக்கவலைப் படுபவர்கள் இவர்கள்.

இப்படியாக ஏழுவகையான மனிதர்களை அடையாளம் காட்டுகிறார் அந்த நிபுணர். இதில் நாம் எந்த ரகத்திலே வருகிறோம் என்பதை நாங்கள் தான் அடையாளம் கண்டு பிடிக்க வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒரு மனிதர் – அவர் ஒரு வித்தியாசமான "டைப்" எதையும் பிரக்டிகலா சிந்திப்பவர். எப்பொழுதும் அடுத்தவர்களும் நன்றாக இருக்க வேண்டும்– நாமும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென ஆசைப்படுகிறவர். அவருக்கு ஒரு சமயம் திடீரென்று உடம்பு சுக மில்லாமல் போய் விட்டது. டாக்டரிடம் போனார். பணம் கொடுத்தார். உடம்பை பரிசோதித்தார்.

டாக்டர் எழுதிக் கொடுத்த மருந் துச் சீட்டை வாங்கினார். ஒரு மருந்துக் கடைக்குப் போனார். பணம் கொடுத்து மருந்தை வாங்கினார். அதை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். அதன் பின் அந்த மருந்தைச் சாப்பிட வேண்டு மல்லவா? ஆனால் அவர் சாப்பிடவில்லை. ஒரு பக்கத்திலே வைத்துவிட்டார்.

நான் அவரைப் பார்த்துக் கேட்டேன் "ஏன் சார் இப்படிச் செய்கிறீர்கள்? வீண் செலவு தானே! நீங்கள் ஏன் டாக்டரிடம் போனீர்கள்?" "டாக்டர் வாழவேண்டு மல்லவா? அதற்காகப் போனேன்" என்றார் அவர். "சரி அப்புறம் ஏன் மருந்து வாங்கினீர்கள்? என்றேன். மருந்துக் கடைக்காரர் வாழவேண்டுமல்லவா? அதற்காக" என்றார். "சரி... அப்புறம் ஏன் வாங்கிய மருந் தைச் சாப்பிடாமல் வைத்துவிட்டீர்கள்?" என்றேன். "நான் வாழ வேண்டு மல் லவா? அதற்காக" என்றார் அவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# கல்வியியல் முதுகலைமாணி பரீட்சை பெறுபேறுகள்

யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகத்தில், 2005/2006 கல்வியாண்டுக்கான கல்வியியல் முதுமாணி கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களின் பெயர்கள் பல்கலைக்கழகம் வெளியிட்டுள் ளது. சித்தியடைந்தவர்களின் பெயர் வருமாறு,

### தமிழ் மொழி மூலம்

திருமதி. பி.அம்பிகைபாலன், திரும்தி வி.அரவிந்தன், வி.சந்திரதேவன், வி.கணேசராஜா, கே.கணேஷநாதன், என்.இதயராஜன், வி.ஜீவநாதன், ரி.ஜோன். குயின்ரஸ், எஸ்.கிருபாகரன், ரி.கோபாலகிருஷ்ணன், கே.கிருஷ்ணகரன், ஜி.கிருஷ்ணகுமார், கே.குகநாதன், எஸ்.லலீசன், திருமதி பி.மங்களேஸ்வரன், செல்வி எஸ். மாணிக்கம்.

என்.மனோறஞ்ஜிதன், திருமதி பி.மக்மில்லன், திருமதி எம்.முரளிதரன், எஸ்.நகுலராஜா, எஸ்.நரேந்திரன், கே.பாஸ்கரன், ரி.பிரபாகரன், கே.ரவீந்திரன், ஏஸ்.ரவிச்சந்திரன், கே.ரவிசந்திரன், கே.சத்தியபாலன், எஸ்.சயந்தன், கே.சிறிகணேஷன், எஸ்.சிவகுமாரன், எஸ்.சிவானந்தன், எம்.சிவபாலன், திருமதி ஆர்.சிவசிதம்பரம், செல்வி எஸ்.சிவசுப்பிரமணியம்.

எஸ்.சோமசுந்தரம், எஸ்.சிறிகுமாரன், திருமதி பி.சிறிதரன், செல்வி ஆர்.தனஞ்சயன், எஸ்.தனஞ்சயன், செல்வி வி.தவபாலன், திருமதி ஜே.தவசீலன், ரி.தயாளன், எஸ்.தேவகுமாரன், கே.திருச்செல்வம், எஸ்.உருத்திரகுமார், திருமதி ஜி.உதயகுமார், கே.உதயசந்தர், கே.வாகீசன், இ.எல்விஸ்.

### ஆங்கில மொழிமூலம்

என்.அம்பிகைபாகன், பி.அரவிந்தன், பி.அருந்தவசெல்வம், திருமதி என்.அருந்தவம், ரி.அசோகலிங்கம், வண.எஸ்.இம்மானுவேல் றெஜினோல்ட், சி.பிரான்சிஸ் சேவியர், பி.கணேசன், என்.ஜனககுமார், வி.கார்த்திகேயன், கே.கதிரேசபிள்ளை, பி.கிருபாநந்தன், ஏ.கோகுலராஜன், பி.கிருஷ்ண ஜோதி, ஆர்.குகானந்தன், கி.குலரதன், செல்வி வி.குலசேகரம், வி.மகாதேவன், என்.மகேந்திரன், எஸ்.மதியழகன், எஸ்.முகுந்தன்.

பி.முரளிதரன், வண.ஜி.நடராஜா, ஏ.நித்திலவர்ணன், என்.பரமேஸ்வரன், கி.எல்.டபிள்யூ. பற்றிக், எஸ்.பற்றிக் ஜெராட், கே.பிரதீபன், ஆர்.ராஜேஸ்வரன், செல்வி. கே.இராசையா, செல்வி வி.இரட்ணசிங்கம், செல்வி வி.இரட்ணசிங்கம், கே.றுகுணன், என்.சபாநாயகம், எஸ்.சிவகாந்தன், திருமதி எஸ்.சிவகுமாரன், வணபீ.எஸ்.சொலமன், எஸ்.சிறீகுமார்.

வண.சகோ.யோச்சின் ஸ்ரானில்லாஸ், செல்வி எஸ்.சுப்பிரமணியம், செல்வி எஸ்.சுந்தரம், திருமதி சி.ஏ.திருகுமார், செல்வி வி.வைத்திலிங்கம், செல்வி எஸ். வேலும்மயிலும், செல்வி ரி.வேலும்மயிலும், வி.விஜயபாஸ்கர், பி.விஜயகுமாரன்.

### தமிழ் மொழி மூலம் (வவுனியா வளாகம்)

செல்வி எம்.ஏ.அந்தோனி முத்து, திருமதி என்.அரவிந்தன், கே.எழில்வேந்தன், என்.இந்திரகுமாரன், திருமதி வை.கருணாகரன், ரி.கிருபாகரன், ரி.குலேந்திரகுமார், திருமதி எஸ்.குலேந்திரகுமார், எ.மதியுதீன், மிறால், செல்வி ஜே.மகாதேவன், என்.மகாலிங்கம், எஸ்.மகேந்திரராஜா, ஜி.மகிழ்ச்சிகரன், எஸ்.மனோகரன், திருமதி எம்.முகுந்தன், என்.முரளிதரன், எஸ்.முரளி, திருமதி வை.முருகேசபிள்ளை, எம்.மூவேந்தன்.

திருமதி வி.நகுலேஸ்வரதாசன், திருமதி எஸ்.பி.தினகரன் கொன்செற்ற, ஜி.பரமநாதன், பி.பி.ராஜக்கோன், சொன்ஜலான் தத்தேசு, எம்.பிச்சைமுத்து நடராஜா, வி.ராஜேந்திரன், வி.ராஜதேவன், வி.ரங்கநாதன், எம்.ரங்கராஜ், எம்.ராதாகிருஷ்ணன், திருமதி வி.ரவீந்திரநாதன்.

கே.சயந்தன், என்.எஸ்.செல்வரட்ணம், கே.சிவகுமார், கே.சிவகுமார், திருமதி ஏ.சிவானந்தராஜா, திருமதி எம்.சிவப்பிரகாசம், ஏ.சிவராஜா, ரி.சிறீகாந்தன், எப்.ஸ்ரான்லி டி.மெல்லம்பேட், திருமதி. ஜி.சுரேந்திரன், கே.சுதேஸ்கரன், ஆர்.தமிழழகன், ரி.தர்மலிங்கம், எஸ்.உதயகுமார், ரி.உதயகுமார், ரீ.வாகிசன், வி.விக்னேஸ்வரன், ஓ.விஜயதாசன், என்.விஜேந்திரன், கே.சந்திரகுலசிங்கம். (ஓ)

# இராசிபலன்

28.03.2008
(பங்குனி 15, வெள்ளிக்கிழமை)
கேட்டை மாலை 6.19 மணிவரை
ஷஷ்டி முற்பகல் 10.21 மணி வரை
இராகுகாலம் 10.43-12.13 மணிவரை
சுபநேரம்-06.13-07.43 மணிவரை
தாவடி விநாயகர் கொடி

| | |
|---|---|
| மேடம் | பெரியோர் வெறுப்பு, வியாபார சிந்தை, காரிய தாமதம். |
| இடபம் | வீண்பயம், எடுத்த காரியம் தாமதமாகும், ரோகநிலை. |
| மிதுனம் | காரிய அனுகூலம், தெய்வ சிந்தை, பிறர் உதவி. |
| கடகம் | கடின வார்த்தை, உறவினர் வெறுப்பு, எடுத்தகாரியம் தாமதமாகும். |
| சிங்கம் | தெய்வசிந்தை, நல்ல முயற்சி, போசனசுகம், தெளிந்த சிந்தை. |
| கன்னி | உறவினர் மனஸ்தாபம், காரிய தாமதம், திடீர்நன்மை. |
| துலாம் | தெய்வசிந்தை, நல்ல வரவேற்பு, காரிய சித்தி, தந்தைவழிஉறவு. |
| விருச்சிகம் | நல்ல முயற்சி, தெய்வசிந்தை, சுபசெலவு, போசனசுகம். |
| தனுசு | பிதாசிந்தை, பிரயாணம், ரோக நிலை, அமைதிக்குறைவு. |
| மகரம் | வீண் பிரச்சினை, முயற்சி தடங்கல், திடீர் நன்மை, தெய்வசிந்தை. |
| கும்பம் | குடும்ப மகிழ்ச்சி, நிலைமாற்றம், பிரயாண நன்மை, தெய்வ தரிசனம். |
| மீனம் | பெரியோர் சந்திப்பு, உற்சாகம், சுபசெய்தி, விருந்துபசாரம். |

வளவன்

# சென்னையில் தாக்கப்பட்ட திரைப்பட இயக்குநர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

இலங்கை உள்நாட்டுப் போரை மையமாக வைத்து "பிரபாகரன்" என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படத்தின் இயக்குனரான துஷார பீரிஸ் நேற்று முன்தினம் சென்னையில் புலிகளின் ஆதரவாளர்களினால் தாக்கப்பட்டார்.

பின்னர் அவர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக நேற்று அனுமதிக்கப்பட் டுள்ளார்.

சிங்கள மொழியிலான இத் திரைப்படத்தின் கலர் பிரிண்ட் எடுக்கப்பட்டு இலங்கைக்கு கொண்டு வருவதற்காக சென்னையில் உள்ள ஜெமினி கலர் லெப்புக்குச் சென்றிருந்தபோதே இயக்குநர் துஷார பீரிஸ் தாக்கப்பட்டுள்ளார்.

திராவிடர் இயக்க தமிழர் பேரவை மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்களே இவர் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகின்றது. புலிகள் இயக்க தலைவர் பிரபாகரன் பற்றி தவறாக சித்தரித்திருப்பதாக கூறி திரைப் படத்தைப் பார்க்காமலேயே அவர்கள் இயக்குனரைத்தாக்கியுள்ளனர்.

புலிகள் இயக்கத்தில் மனித வெடிகுண்டாக உருவாக்கப்படும் ஒருவர் அங்கிருந்து தப்பிச் செல்வதை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டுள்ள இத்திரைப்படத்தை வெளியிட இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபன தணிக்கை சபை அனுமதி அளித்துள்ளது. இப்படத்தை ஏப்ரல் இறுதியில் திரையிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்தத் திரைப்படத்தின் பிரத்தியேக காட்சிகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தேசிய் திரைப்படக் கூட்டுத்தாபனத்திலுள்ள திரையரங்கில் சிரேஷ்ட இராணுவத் தளபதிகளுக்கு காண்பிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# அநுராதபுரத்தில் சிக்கின் குனியா நோயாளர் அதிகரிப்பு

(கொழும்பு)

அநுராதபுர மாவட்டத்தில் சிக்குன்குனியா, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் சிக்குன்குனியா, டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சரத் வீரபண்டார தெரிவித்துள்ளார்.

100ற்கும் மேற்பட்ட நோயாளர்கள் தற்போது இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். மாவட்டத்தில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையே நோய் பரவுவதற்கான காரணமெனவும், நோய் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-5)

# அரசாங்கப்பாடசாலைகளின் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டி

(கொழும்பு)

அனைத்து அரசாங்கப் பாடசாலைகளையும் உள்ளடக்கிய தரம் 1 தொடக்கம் தரம் 5 மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான ஒழுங்குகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

முதலாவது போட்டி சப்ரகமுவ மாகாணத்தில் நடைபெறுமென கல்வி அமைச்சின் விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் எல்.கே.ஜயவீர தெரிவித்துள்ளார். இப் போட்டிகளை நடத்துவதன் மூலம் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் விளையாட்டுத் திறன்களை விருத்தி செய்ய முடியுமென அமைச்சு நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# யாழ்.மாவட்டத்தில் மீள் எழுச்சித் திட்டம்

உலக வங்கியின் அனுசரணையுடன் ஆரம்பமாகியுள்ள மீள் எழுச்சித் திட்டம் நியாப் திட்டங்களின் ஒரு சகோதர திட்டமாகவும் நியாப் -I, நியாப்-II, திட்டங்களை அமுல்படுத் தும் வகையில் கிடைக்கப்பெற்ற அனுபவங்கள் பயனுறுதி வாய்ந்த செயற்பாடுகளை உள்ள டக்கி உருவாக்கப்பட்டுள்ளது. நியாப் -I, நியாப்-II திட்டங்களின் தொடர்ச்சியும் பேணப்படு கிறது.

இவ்வாறு கடந்த 4 ஆம் திகதி மாவட்ட செய லக கேட்போர் கூடத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெற்ற மீள் எழுச்சித் திட்ட அறிமுக நிகழ்வின் குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நியாப் -I திட்டமானது 2000 ஆம் ஆண் டில் உலகிலேயே கலவரம் நிலவும் காலத்தில் உலக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதல் திட்டமாகவும் அதே ஆண்டில் இலங் கையின் வடகிழக்கிலுள்ள 8 மாவட்டங்களி லும் ஆரம் பமானது. யாவரையும் உணவு உற்பத்தியை உடனடியாக மேம்படுத்துவதை இலக்காகவும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும், தெரிந் தெடுக்கப்பட்ட அருகாமையி லுள்ள 4 மாவட் டங்களிலும் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை யும் நல்ல முறையில் இயங்கக் கூடிய நிலைக் குக் கொண்டு வருவதை இலக்காகவும் கொண் டிருந்தது.

சமூக வலுவூட்டல் திட்டம் அனுபவமுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட காலங்களுக்கு வழங்கப்பட்டு சமூக வலுவூட்டல் மூலம் வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன. அரச சார்பற்ற நிறுவனத்தின் செயற் பாடு முடிவடையும்பொழுது சமூக வலுவூட்ட லும் நலிவுற்றது. இத்திட்டம் வரையறை செய் யப்பட்ட திட்டங்களையே மேற்கொள்ள வகை செய்தது.

அதேபோல் நியாப் -II திட்டமானது விவ சாயத்தினையும் ஏனைய தொடர்புடைய தொழில் முயற்சிகளையும் வர்த்தக ரீதியில் தூண்டும் நோக்கோடு ஆரம்பமானது. அத்து டன் வரையறை செய்யப்பட்ட சமூக திட்டங் களுக்கே முன்னுரிமை வழங்கி செயற்பட்டது. சமூக வலுவூட்டலில் அரச சார்பற்ற நிறுவனங் களுக்கப் பதிலாக அரச திணைக்கள, முன்ன ரங்கு அலுவலர்களும் திட்டத்தின் சமூக வலு வூட்டாளர்களும் பங்கெடுத்தனர். மக்களால் தோற்றுவிக்கப்பட்ட சிறு குழுக்கள் சேமிப்பு கள் நன்கு தூண்டப்பட்டன. மையக் கிராமங் கள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் முக்கியமாக நியாப் -I, நியாப் -II, இல-39 பலநோக்கு மண்டபங்கள் அமைக்கப்பட்டன.

மீள் எழுச்சி திட்டமானது (Re-Awakening Project) மையக் கிராமத்தின் தூரநோக் கோடு இணைந்து செயற்பட வல்லதாக வுள்ளது. இத் திட்டத்தினை நான்கு தூண்கள் தாங்கி நிற் பதாக கணிக்கமுடியும். அத் தூண்கள் பின் வருமாறு அமையும்.

1. சமூகத்தை அணிதிரட்டி ஒன்று சேர்ந்து செயற்படுவதன் மூலம் கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் (VDO) தோற்றுவித்தல்.

2. இதில் நலிவுற்றோர்கள், ஏழைகள், ஊனமுற்றோர் போன்றோரது குரலையும் ஓங்கச் செய்தல்.

3. ஆரம்பிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக கிராம அபிவிருத்தித் திட்டத்தினை (VDP) தயாரித்து மக்கள் மூலமாக நேரடியாக செயற்படுத்தல்.

4. இச் செயற்பாட்டில் சேவைகளை வழங் கும் நிறுவனங்களாக அரச/தனியார் நிறுவ னங்களின் சேவைகள் வெற்றிகரமாக பெற்றுக் கொள்ளும் வல்லமையை வளர்த்தல்.

இச் செயற்பாடுகளின் மூலம் நிலைத்து நிற் கக் கூடிய மக்கள் மயப்படுத்தப்பட்ட அபிவிருத் திப் பணிகளை மேற்கொள்ளும் திட்டமாக இவ் மீள் எழுச்சி திட்டமானது அமையவுள்ளது. அதில் பின்வருவன பிரதானமானவையாகும்.

1. சமூகத்தின் நம்பகத்தன்மையை நன்கு வளர்ப்பதாக அமையும்.

2. சமூக வலுவூட்டல் முன்னரங்கு அலுவலர் களும், திட்டத்தின் சமூக வலுவூட்டாளர்களும் இணைந்து செயற்பட்டு திட்டம் நிலைத்து நிற்கக்கூடிய தன்மை பேணப்படும்.

3. சமூகத்திற்கு தேவைப்படும் ஆற்றலும் அறிவும் வளர்த்தெடுக்கப்பட்டு சமூகம் சுயமாக செயற்படும் வல்லமை உருவாகும்.

4. மையக் கிராம மக்களது வருமானமும், சேமிப்பு, தொழில்வாய்ப்பு, உற்பத்திகள் தூண்டப்படுவதுடன் சந்தை வாய்ப்புகளும் தொடர்புபடுத்தப்படும்.

இச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக நியாப்-I, நியாப்-II, மீள் எழுச்சித் திட்டங்கள் யாழ். குடாநாட் டின் குடிநீர் பற்றியும் மிகவும் அக்கறையாக உள்ளது. விவசாய தொழில் முயற்சி தூண்டப்படும் பொழுதும் கூடுதலான நீர் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுவதனால் நிலத்துக்கடியில் உள்ள நீர்வளம் வற்றிவரும் நிலையும் உள்ளது. இதன்மூலம் குடிநீர் தரம் மாசு அடையும் நிலை உள்ளது. இவற்றைத் தவிர்க்கும் பொருட்டு மழை நீர் சேகரிப்பு, குளங் களை புனரமைத்தல் என்பனவும் இடம்பெற் றன. குடிநீர் பற்றி விரிவான ஆய்வுகளும் மேற் கொள்ளப்பட்டது. இதன்மூலம் வழுக்கையா ற்று திட்டத்தினை அமுல்செய்தல், தொண்டை மானாறு வழியே கடல்நீர் உட்புகுவதனை தடுப்பதற்கான நீர்ப்பாசன திணைக்கள கதவு களை மீண்டும் புனரமைத்தல், உப்பு நீர் மீண்டும் தீவுப் பகுதிகளிலும் ஏனைய இடங் களிலும் பரவுவதனை தடைசெய்ய அமைக்கப் பட்ட மண் அணைகளையும் தொடர்புடைய கட்டுமானங்களையும் மீண்டும் புனரமைக் கும் நடவடிக்கைகளும் தொடர்ந்து செய்ய உத்தே சிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, மேலதிக திட்டப்ப ணிப்பாளர் (வடக்கு) எந்திரி ஏ.சி. வினோதராஜ், மாவட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் வே.விசுவலிங்கம், முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரும், வாழ்நாள் பேராசிரியருமா கிய பொ.பாலசுந்தரம்பிள்ளை, வடக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் திருமதி பி. சிவலிங் கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பனை தென்னை வள அபிவிருத்தி சபையி னது தலைவருமாகிய எஸ்.சிவதாஸன், யாழ். மாவட்ட அனைத்து பிரதேச செயலகர்கள்/ உ.அ.அதிபர்கள், உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர், யாழ்.மாநகர சபை ஆணையா ளர், பிரதேசசபை உத்தியோகத்தர்கள், உள்ளூர் /வெளியூர் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதி கள், சமூகசேவை அமைச்சினது பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், வ்ங்கிப் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட மீள் எழுச்சி திட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (அ)






பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் தென்னிலங்கை டாக்டர்கள் குழு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் தலைமையில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கு விஜயம் செய்தது. அங்கு அவர்கள் இறைவணக்கத்திலீடுபட்டிருப்பதையும், வைத்திய கலாநிதிகளான ஆர்.எஸ்.மஹாகெதற,எஸ். தயான் சொய்சா, கே.ஜி.கே.கோதாகொட ஆகியோர் சுவாமி சித்ரூபானந்தாவுடன் கலந்துரையாடுவதையும், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் எஸ்.அகிலன் உட்பட கலந்துகொண்ட குழுவினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)

## ஸ்ரீ அம்மா பகவான் கலச, பாதுகை பூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவலர் பாடசாலை தியான மண்ட பத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை நடை பெறும்.

இதில் அனைத்து மாணவர்களையும் கலந்துகொண்டு ஆசியைப் பெற்று உய்யும் வண்ணம் எகத்துவ யாழ்.தலைமையகம் கேட்டுள்ளது. (அ)

## அன்னை சிவத்தமிழ்ச் செல்விக்கு சுகம் வேண்டிப் பிரார்த்தனை

அகில இலங்கைத் திருமுறை மன்றம் ஆலயங்கள் தோறும் வெள்ளிக்கிழமைகளில் நடாத்திவரும் பன்னிரு திருமுறை கூட்டு வழிபாட்டில் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சுகநலம் வேண்டிப் பிரார்த்தித்து வருவதாக மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (அ)

## தர்மாசிரியர் பரீட்சைக்கான கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் நடாத்தப்படும் இந்து தர்மாசி ரியர் பரீட்சைக்கான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8மணிக்கு யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் மாவட்ட இணைப்பாளர் க.தேவேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் தர்மாசிரியர் பரீட்சை க்கு விண்ணப்பித்தவர்களும், விண்ணப் பிக்க உள்ளோரும் கலந்து பயன்பெறுமாறு வேண்டப்படுகின்றனர்.

இந்நிகழ்வில், சைவப்புலவர் பு.ஸ்ரீந்திரன், ஆசிரியர் சி.பத்ராஜா, சைவப்புலவர் பால சண்முகன், சைவப்புலவர் நித்தியதசிதரன், சைவப்புலவர் கந்த சத்தியதாசன் ஆகியோர் விரிவுரைகளை வழங்கவுள்ளனர். (ஓ)

## அரியாலை அபிவிருத்திச் சங்கம் கல்விப் புலச் சேவை

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்திச் சங்கம் நடப்பு வருடம் தொடக்கம் நடைமுறைப்படுத்த உள்ள தரம் 10 தொடக்கம் தரம் 13 வரைக்கான க. பொ.த.சாதாரணதர மற்றும் உயர்தர புல மைப் பரிசில் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவமும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஏ-9 வீதியில், அரியாலை தபால் கட்டைச்சந்திக்கு அருகாமையில் உள்ள சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமும், சிறப்பு விருந்தினராக அரியாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி ம. குணரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். (ஓ)

## நெல்லியடியில் பிரதேச மட்ட சர்வதேச மகளிர்தின விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செய லக மட்ட சர்வதேச மகளிர் தின விழா எதிர்வரும் 30 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமணமண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை தலைவர் திருமதி. தேவரஞ்சினி சிவாஸ்கரன் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் சிறப்பு நிகழ்வாக "குடும்பத்தின் அந்தஸ்தை பெரிதும் தக்க வைத்துக்கொள் வது பெண்களே" எனும் விவாத அரங்கு உள் ளிட்ட பல கலை நிகழ்வுக ளும் இடம்பெறவுள் ளன. (அ)

## மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

மருத்துவமுகாமும், கண்பார்வை குறைந் தவர்களுக்கான கண்ணாடி வழங்கலும் எதிர் வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிமுதல் பிற்பகல் 2மணிவரை கட்டப் பிராய் முத்துமாரி அம்மன் சனசமூக நிலை யத்தில் கோப்பாய் லயன்ஸ் கழகத்தினரால் நடாத்தப்படவுள்ளது.

கோப்பாய் அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வர்கள் இம் முகாமில் கலந்து பயனடைய லாம் என்றும் கண்பார்வை குறைந்தவர்கள் கண்க ளைப்பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள் ளலாம் என்றும் கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் அ.சற்குணநாதன் தெரிவித் துள்ளார். (அ)

+++

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை புன்னா லைகட்டுவன் தெற்கு அரசினர் தமிழ்க் கல வன் பாடசாலையில் இலவச மருத்துவமுகாம் நடாத்தப்படவுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னா லைக்கட்டுவன் தெற்கு, குப்பிளான் தெற்கு, குப்பிளான் வடக்கு, ஈவினை கிராமசேவை யாளர் பிரிவுக்குட்பட்டவர்கள் இம் மருத்துவ முகாமில் பங்குபற்றி பயனடையுமாறு சுன்னா கம் லயன்ஸ் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக மாவட்ட பிரதிநிதி செயலாளர் லயன் டாக்டர்வி.தியாகராஜா ஜே.பியும், கௌரவ விருந் தினராக உடுவில் உதவி பிரதேச செயலர் அ.சோதிநாதனும், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் லயன்ஸ் கழக லயன் டாக்டர் எஸ். பேரின்பநாயகம், இளைப்பாறிய வைத்திய அதிகாரி டாக்டர் ரி.பாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நோயாளர்களுக்கான பொதுமருத்துவம், சிறுநீர்ப்பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, குடற்பூச்சி நீக்கி மருந்து வழங்கல், கண் பரிசோதனை, மூக்குக் கண்ணாடி வழங்கல், பற் பரிசோத னை, இலவச மருந்து வழங்கல் ஆகியன வும் இடம் பெறும் எனத் தெரிவிக்கப் படு கிறது. (ஓ)

## இணுவில் பொதுநூலகம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலை யம் புனருத்தாரண ஆறாம் ஆண்டு நிறைவு விழா பரிசில் வழங்கல் வைபவம் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் நி.கஜேந்திரன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல திக மாவட்ட நீதிபதி வசந்தசேனன், சிறப்பு விருந்தினர்களாக தினக்குரல் முகாமையாளர் கா.சி. நடராசா, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் என்.விஜயசுந்தரம் கௌரவ விருந் தினர்களாக இணுவில் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.சதானந்தன், எவரெஸ்ட் கல்வி நிறுவன அதிபர் கி. பாலச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். தொடக்கவுரை யை யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத் துவ கற்கைகள் பீட பீடாதிபதியும் இணு வில் பொதுநூலக போஷகருமான க.தேவரா ஜா வழங்கவுள்ளார்.

தொடர்ந்து பொது அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் வழங்குவார். அடுத்து நூலகர், நூலக உதவியாளர்கள் கௌரவிப் பும் இடம்பெறும். (அ-6)

# பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் 'பாக்'கின் வகிபாகம் மதிப்பீடு செய்யப்படவேண்டும்

## நவாஸ் ஷெரீப் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் புதிய அரசாங்கமானது பாராளுமன்ற விவாதமொன்றின் பிற்பாடு பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அந்நாட்டின் வகிபாகம் குறித்து மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது என பாகிஸ்தான் முஸ்லிம் லீக் என் கட்சியின் தலைவர் நவாஸ் ஷெரீப் தெரிவித்தார்.



பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் ஜோன் நெக்ரோபொன்ட் மற்றும் உதவி இராஜாங்கசெயலாளர் றிச்சர்ட் பௌச்சர் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய பின் பத்திரிகையாளர் மாநாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது அரசாங்கமானது உலகில் சமாதானம் நிலைபெற விரும்புகின்ற அதேசமயம் பாகிஸ்தானைக் கொலைக் களமாக மாற்ற விரும்பவில்லை என நான் அமெரிக்க அதிகாரிகளுக்கு தெரிவித்தேன் என நவாஸ் ஷெரீப் கூறினார்.

செப்டெம்பர் 11இல் அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதல் நடைபெற்றது முதற்கொண்டு பாகிஸ்தானில் தனி நபரின் அதிகாரமே இருந்து வந்தது பற்றியும் ஆனால் தற்போது நிலைமை மாறி உண்மையான பாராளுமன்ற பிரதிநிதிகள் ஆட்சிக்கு வந்துள்ளமை குறித்தும் அமெரிக்க அதிகாரிகளுக்கு தான் தெளிவுப் படுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு விடயமும் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். அதன் பின் கடந்த 8 வருடகாலப் பகுதியிலான முஷாரப்பின் கொள்கைகள் மதிப்பிடப்படும் என அவர் கூறினார்.

பஞ்சாபில் இடம்பெற்ற இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் என் கட்சியின் முக்கியஸ்தர்களான ஷஹ்பாஸ் ஷெரீப் சௌத்ரி நிஸார் அலிகான் மற்றும் இஷாக் டார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

எமது அரசாங்கமானது பாகிஸ்தானைப் போலவே ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் உலகின் ஏனைய பகுதிகளிலும் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதையே விரும்புகிறது. எனினும் ஏனையவர்களுக்கு சமாதானத்தை வழங்குவதற்கு மாற்றீக எமது மக்கள் எரிகணைத் தாக்குதலுக்கு இலக்காவதை நாம் விரும்பில்லை எனக் கூறிய நவாஸ் ஷெரீப் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ இராணுவ அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் அப்பாவி பொது மக்கள் உட்பட பெருந் தொகையானோர் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் தமது உயிரை இழந்தார்கள் எனத் தெரிவித்தார்.

'மக்கள் முஷாரப்பின் கொள்கைகளுக்கு எதிராக பாராளுமன்றத்திற்கு உத்தியோக பூர்வ ஆணையை வழங்கியுள்ளனர். பாராளுமன்றமே தீர்மானங்களை எடுப்பதற்கான இறைமையுள்ளது. என நான் அமெரிக்கா அதிகாரிகளுக்கு தெரிவித்தேன்' என்ன நவாஸ் ஷெரீப் குறிப்பிட்டார்.

'பயங்கரவாதத்திற்கு எதிரான போர் தொடர்பில் எமது நாட்டின் வகிபாகத்தை பரிசீலிக்க ஒரு பாராளுமன்ற சபை ஸ்தாபிக்கப்படும். அச்சபையே தேசிய அபிலாஷைகளை குறித்த மதிப்பீடு தொடர்பிலான சிபார்சுகளைச் செய்யும்' என அவர் தெரிவித்தார்.

அத்துடன் புதிய ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு வழி ஏற்படுத்தித் தரும் வகையில் ஜனாதிபதி முஷாரப் தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டும் என நவாஸ் ஷெரீப் வலியுறுத்தினார்.

இராஜினாமா செய்யும்படி நான் மீண்டுமொரு முறை முஷாரப்பிற்கு ஆலோசனை கூறுகிறேன். அரசியல் கட்சிகளுக்கு மக்களால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ ஆணைக்கு அவர் மதிப்பளிக்கவேண்டும். பாராளுமன்றத்துக்கு சுமையாக இருப்பதை விடுத்து ஜனாதிபதியாக புதியவர்கள் தெரிவு செய்யப்பட வாய்ப் பொன்றை வழங்கவேண்டும் என நவாஸ் ஷெரீப் அழைப்பு விடுத்தார்.

இதன்போது முஷாரப்பிற்கு எதிராக கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்படுமா என வினவப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் முஷாரப் இராஜினாமா செய்யமறுத்தால் அது தொடர்பில் ஆளுங் கூட்டமைப்பு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும் எனத் தெரிவித்த நவாஸ் ஷெரீப் முஷாரப் நாட்டின் தலைமைப் பதவியிலிருப்பது அரசியலமைப்புக்கும் நீதிக்கும் புறம்பானது என தாம் கருதுவது குறித்து அமெரிக்க அதிகாரிகளிடம் தெரிவித்ததாக கூறினார்.

இதன் போது புதிதாக பதவிப் பொறுப்பேற்ற பிரதமர் யூஸுப் ராஸா கிலானிக்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

இது அதிகாரத்திற்கான இடமாற்ற நிகழ்வு என்பதைவிட நாட்டில் இடம்பெற்று வரும் குண்டுத்தாக்குதல்கள், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், விலை உயர்வுகள், வேலையின்மை சக்தி வளப் பற்றாக்குறை உள்ளக மற்றும் வெளியக கடன்கள் மற்றும் நீதி முறைமையின் சீர்கேடு என்பன தொடர்பான தீர்வுகளை காணக் கோரும் பிரச்சினைகளின் கைமாற்றமாகும் என அவர் கூறினார். (அ-5)

## கலவரத்துக்கு காரணமான 660 பேர் திபெத்தில் சரண்?

(பீஜிங்)

திபெத்தில் கலவரத்தில் ஈடுபட்ட 660 பேர் சரணடைந்துள்ளதாக சீனா கடந்த புதன் கிழமை தெரிவித்துள்ளது.

280 பேர் திபெத்தின் தலைநகரான லாசாவிலும்380 பேர் சிசூன் மாகாணத்தில் உள்ள அபேயிலும் சரணடைந்ததாகவும் சீனா தெரிவித்துள்ளது.

திபெத்தில் ஏற்பட்ட கலவரத்துடன் தொடர்புடையவர்களான 53 பேரை தேடி வருவதாகக் கடந்த திங்கட்கிழமை சீன அரசு பட்டியல் வெளியிட்டது. இந்த பெயர் பட்டியல் வெளி வந்ததைத் தொடர்ந்து 660 பேர் தாங்களாகவே முன்வந்து சரணடைந்துள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. (அ-5)

## சோமாலியாவின் முக்கிய நகரை தீவிரவாதிகள் கைப்பற்றினர்

(மொகாதிசு)

ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள சோமாலிய நாட்டில் உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இங்கு அரசு படை களுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக சண்டை நடந்து வருகிறது.

## உலக தரிசனம்

சோமாலியாவில் உள் ள முக்கிய நகரங்களில் ஒன்று ஜோவ்கர் . அரசு கட்டுப்பாட்டில் இருந்த இந்த நகருக்குள் 100 பேர்கொண்ட தீவிர வாதிகள் படை புகுந்தது. அவர்கள் ராக்கெட்டுக்கள் பயங்கர வெடிகுண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தினார்கள். இதனால் அரசு படைகள் அங்கிருந்து ஓடி விட்டன. அந்த நகரரை தீவிரவாதிகள் கைப்பற்றினர். இங்குள்ள ஜெயிலில் ஏராளமான தீவிரவாதிகள் அடைக்கப்பட்டு இருந்தனர். அவர்களையும் மீட்டனர். (அ-5)

# ஆஸ்திரியாவில் பனிப்புயலால் பாரிய வாகன விபத்து

வடமேற்கு ஆஸ்திரியாவில் சுமார் 70 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இடம் பெற்ற பாரிய விபத்தில் ஒருவர் பலியாகியதுடன் 37 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.



சீவால் சென் நகருக்கு அண்மையில் வியன்னாவிற்கும் சாள்ஸ்பேர்க்கிற்கும் இடையிலான 'ஏ1' நெடுஞ்சாலையில் இடம்பெற்ற இந்த விபத்துக்கு பனிப்புயலொன்றால் ஏற்பட்ட பார்வைப் புலன் தெளிவற்ற நிலைமையே காரணம் எனக் கூறப்படுகிறது.

இவ்விபத்தில் சுவிட்ஸர்லாந்தில் வசிக்கும் ஸ்பெயின் நாட்டு பிரஜையான பெண்மணியொருவர் பலியாகியுள்ளார் எனவும் காயமடைந்தவர்களில் அறுவரின் நிலைமை கவலைக்கிடமாக காணப்படுவதாகவும் ஆஸ்திரிய பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் விபத்துக்குள்ளான வாகனங்களுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி கடும் பனி காரணமாக தாமதமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-5)

# எண்டெவர் விண்கலம் தரை இறங்கியது

(புளோரிடா)

விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஓடம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் கட்டுமானப்பணிகள் பல்வேறு கட்டங்களாக நடந்து வருகின்றன. இதற்கான பொருட்கள் அமெரிக்கா மற்றும் ரஷிய விண்கலங்கள் மூலம் ஏற்றி அனுப்பப்பட்டு வருகின்றன.



அமெரிக்காவில் எண்டவர் விண்வெளி ஓடம் கடந்த 11ஆம் திகதி 7 விண்வெளி வீரர்களை ஏற்றிக்கொண்டு விண்வெளிக்கு பறந்தது. இதில் ஜப்பானின் ஆய்வு கூடம் கனடாவின் ரோலார் ஆகியவை ஏற்றி அனுப்பப்பட்டது.

விண்வெளி ஓடம் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்து 12 நாட்கள் அங்கேயே இருந்தது. அங்கு பணிகள் முடிந்து கடந்த திங்கட்கிழமை பூமிக்கு புறப்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்காவில் தரை இறங்குவதாக இருந்தது. ஆனால் சீதோஷ்ண நிலை சரி இல்லாததால் தள்ளி வைக்கப்பட்டது.

இலங்கை நேரப்படி நேற்று காலை 8 மணியளவில் விண்கலம் புளோரிடாவில் பத்திரமாக தரை இறங்கியது.

அடுத்ததாக மே மாதம் கடைசி வாரத்தில் அடுத்த விண்கலம் அனுப்பப்படுகிறது. 2010 ஆம் ஆண்டுக்குள் விண்வெளி நிலையம் அமைக்கும் பணியை முடிக்க திட்டமிட்டுள்ளனர்.

இதற்கான பொருட்களை இன்னும் 10 தடவை கொண்டு செல்ல இருக்கின்றனர். (அ-5)

# தலாய்லாமாவுடன் பேச்சுவார்த்தை நடத்த சீனா மறுத்தால் ஒலிம்பிக்கை புறக்கணிப்போம்

## பிரான்ஸ்அதிபர் சர்கோசி எச்சரிக்கை

சீனாவில் பலாத்காரமாக இணைக்கப்பட்ட திபெத் பகுதிக்கு விடுதலை கோரி திபெத்தியர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இந்த போராட்டத்தை சீனா இரும்புக்கரம் கொண்டு அடக்கியது. இதில் 100 பேருக்கும் மேற்பட்டவர்கள் பலியானதாக திபெத்திய தலைவர் தலாய்லாமா குற்றஞ்சாட்டியுள்ளார். இதற்கு உலகநாடுகள் கண்டனம் தெரிவித்தன. திபெத்துக்குள் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் நுழைவதற்கு சீனா தடை விதித்துள்ளது.

திபெத் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு திபெத்திய தலைவர் தலாய்லாமாவுடன் பேச்சுவார்த்தையை சீனா தொடங்க வேண்டும். அப்படி செய்யாவிட்டால் வருகிற ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி நடக்கும் ஒலிம்பிக் போட்டி தொடக்க விழாவை நாங்கள் புறக்கணிப்போம் என்று பிரான்ஸ் அதிபர் சர்கோசி எச்சரித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பு பிரான்ஸ் வசம் விரைவில் வர இருக்கிறது. அதனால் அவரது புறக்கணிப்பு அறிவிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

### விளையாட்டில் அரசியலைக் கலக்கக்கூடாது - அமெரிக்கா

இதற்கிடையில் ஒலிம்பிக்போட்டி தொடக்க விழாவை புறக்கணிப்பதை ஏற்க முடியாது என்று கூறி அமெரிக்கா மறுத்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசி கூறுகையில், ஒலிம்பிக் போட்டி விளையாட்டு தொடர்பானது. இதில் அரசியலை கலக்கக்கூடாது. எனவே ஒலிம்பிக் போட்டியை புறக்கணிப்பதை நான் ஆதரிக்கவில்லை என்று குறிப்பிட்டார். சீனா உலக நாடுகளுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவுக்கு எந்தவிதமான ஆதரவும் கொடுக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

### பேச்சுவார்த்தை நடத்தமாட்டோம்

திபெத்தில் ஏற்பட்ட கலவரம் தலாய்லாமா கும்பலால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட சதிச் செயல் ஆகும் என்று சீனா கூறியுள்ளது. இது தொடர்பாக சீன அதிகாரி ஒருவர் நிருபர்களிடம் கூறுகையில், தலாய்லாமா பிரிவினைவாத கோரிக்கையை கைவிடும்வரை அவருடன் எந்த விதமான பேச்சுவார்த்தையும் நடத்த மாட்டோம் என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சீனாவின் நிலைப்பாட்டுக்கு 110 நாடுகள் ஆதரவு தெரிவித்து உள்ளன என்றும் குறிப்பிட்டார். (அ)

# வெடி விபத்தில் 22 பேர் பலி

(பீஜிங்)

வட மேற்கு சீனாவில் நடைபெற்ற வெடி விபத்தில் 22 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தில் மேலும் 10 பேர் காயமடைந்ததாக சீன அரசின் செய்தி நிறுவனம் நேற்று தெரிவித்துள்ளது.

துர்பான் என்ற இடத்தில் வெடி குண்டுகளை செயலிழக்கச் செய்யும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டிருந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வெடிவிபத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட தீ போராடி அணைக்கப் பட்டது.

இந்த சம்பவத்தில் 22பேர் உயி ரிழந்ததாகவும் , காயமடைந்த 10 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சீனாவின் ஜின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த சம்பவம் குறித்து சீன அதிகாரிகள் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளனர். (அ)

# இலங்கையை தனது ஆதிக்கத்துக்குள் கொண்டு வரும் சமூகத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது இந்தியா

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலிகளின் தலைவர் பிரபாகரனை அழிப்பதற்கு உதவி புரியும் இந்தியா மறுபுறம் அரசியல் தீர்வை காணுமாறு வலியுறுத்துகிறது. இந்தியாவின் இத்தகைய



இரட்டை வேடத்துக்குள் மறைந்திருக்கும் மர்மம் என்ன என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும். பிரபாகரனை அழிக்க ஒத்துழைப்பு வழங்கும் இந்தியா அதற்கு கப்பமாக இலங்கையை தனது ஆதிக்கத்திற்குள் கொண்டு வரும் சதித்திட்டத்தை நடை முறைப் படுத்தி வருகிறதுஎன்று ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இந்தியாவினால் இலங்கை மீது திணிக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தினை முன்னெடுப்பதைக்கை விட்டு அதனை ரத்துச்செய்யும் நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுக்கவேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

கொழும்பு தேசிய நூலக ஆவனவாக்கல் சபைக் கேட்போர் கூட்டத்தில் கடந்த புதன் கிழமை இடம் பெற்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கொண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது,

முன்னாள் ஜனாதிபதி ஜெ.ஆர்.ஜெயவர்த் தனாவை அச்சுறுத்தி இலங்கையின் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை ஊரடங்குச்சட்டம் மூலம் மௌனமாக்கி பலாத்காரமாக சத்திர சிகிச்சையை மேற்கொள்வது போன்றே இந்தியாவினால் அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் திணிக்கப்பட்டது.

இதனை அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கடுமையாக எதிர்த்தது. ஆனால் இன்று 13ஆவது திருத்தம் அரசியலமைப்பின் சட்டமாக்கப்பட்டுள்ளது என கூறிக்கொண்டு அதனை முன்னெடுக்க மூனைகிறது. இதனைகைவிட்டு இத் திருத்தத்தை ரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுக்கவேண்டும்.

எமது நாட்டின் எரிபொருள் ஏகபோக உரிமையை தனதாக்கிக்கொண்டுள்ள இந்தியா மின் சக்தியையும் கைப்பற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதற்கு அரசாங்கமும் துணை போகிறது..மின்சக்தியும் கைமாறினால் நாடும் மிகவும் பயங்கரமான நிலைக்கு தள்ளப்படும்.

இந்நிலை உருவானால் எமது நாட்டின் அரசியலில், பொருளாதாரத்தை ஆட்டுவிக்கும் சக்தியாக இந்தியா உருவெடுக்கும்.

விடுதலைப்புலிகள் முழுமையாக தோல்வி கண்டாலும் அதன் பின்னர் இந்தியாவின் ஆக்கிரமிப்புக்குள் சிக்கிவிடும் அபாயம் தற்போது தோன்றியுள்ளது.

### அமெரிக்காவின் இரட்டைவேடம்

இலங்கையின் மனித உரிமைகள் மீறப்படுவதாக அமெரிக்காவின் இராஜாங்க திணைக் களம் வெளியிட்டுள்ள அறிக்கையை நிராகரிப்பதோடு கடுமையாக கண்டிக்கின்றோம். உலகில் எந்தவொரு நாட்டினதும் மனித உரிமைகள் தொடர்பாக பேசும் உரிமை அமெரிக்காவுக்குக்கிடையாது. ஈராக்கில் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகளை நியாயப்படுத்தும் புஷ் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக குற்றம் சுமத்துவது எவ்வாறு நியாயமாகும்.

### அரசின் வெளிநாட்டுக்கொள்கை

ஜனாதிபதி ஈரானுக்கு விஜயத்தை மேற்கொள்கிறார். பிரதமர் இஸ்ரேலுக்கு விஜயம் செய்கிறார். பரஸ்பரம் விரோதமான வெளி நாட்டுக்கொள்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. எதுவிதமான நிலையான கொள்கைகள் இல்லாததால் இறுதியில் அனைவராலும் கைவிடப்படும் நிலையே எமக்கு ஏற்படும்.

அத்துதோடு லண்டன் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்ள அதிகாரிகள் நாட்டின் நன்மை கருதி எதுவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை. வெளிநாட்டுக் கொள்கைகள் அனைத்தும் குழப்ப கரமானதாகவே உள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை அண்மையில் சந்தித்த பிரபாகரன் கொசோவோவை போன்றதொரு ஒரு பிரிவினையை இங்கும் எதிர்பார்ப்பதாகவும் அதற் கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

கொசோவோ தனி நாடாக பிரகடனப் படுத்தப்பட்ட போதும் அங்கிருந்த வெளிநாட்டுக்கொள்ளை முரண்பாடுகளே இன்று இலங்கையிலும் காணப்படுகிறது. எனவே அரசாங்கம் இதுவிடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். (அ-5)

## ரணில் –லியாம் பொக்ஸ் முக்கிய பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானியாவின் முன்னாள் வெளிவிவகார



அமைச்சர் லியாம் பொக்ஸுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்ரம சிங்கவிற்கும் இடையில் முக்கிய பேச்சுவார்த்தைநடத்தப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பிரதான இரு கட்சிகளினாலும் எடுக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டங்கள் தொடர்பாகவிரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லியாம் பொக்ஸ் ,ஐக்கிய தேசியக்கட்சிக்கும்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

## கிழக்கு மாகாண சபைத் தேர்தல்

# இணைந்து போட்டியிடுவது தொடர்பாக ஐ.தே.க.-மு.கா., ஞாயிறன்று முடிபு?

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக நேற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் மீண்டும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சந்தித்து பேசுவதென தீர்மானித்துள்ளன. எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.க. குழுவுக்கும் ரவூப் ஹக்கீம் எம்.பி. தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் குழுவுக்குமிடையில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற சந்திப்பின்போது மாகாண சபை தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் தீர்க்கமான முடிவெதுவும் எடுக்கப்பட வில்லை.

மீண்டும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரு கட்சிகளின் தலைவர்களும் சந்தித்து பேச ஏற்பாடாகியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் ஐ.தே.க. வின் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க, தவிசாளர் ருக்மன் சேனநாயக்க, முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த பேச்சுவார்த்தை குறித்து ஐ.தே.க. வின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில் கூறியதாவது,

இரு தலைவர்களுக்குமிடையேயான பேச்சுவார்த்தைகள் மிகவும் சுமுகமாக இடம் பெற்றன. அத்தோடு இதர அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி மீண்டும் ஞாயிற்றுக்கிழமை சந்தித்து பேச்சு நடத்த இணக்கம் காணப்பட்டது.

இப்பேச்சுவார்த்தைகளின்போது கிழக்கு மாகாணத்தின் தற்போதைய அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக இரு தலைவர்களும் விரிவாக ஆராய்ந்தார்கள். அதே நேரம் தேர்தலை கண்காணிப்பதற்கு வெளிநாட்டுக்கண்காணிப்பாளர்களை வரவழைக்க வேண்டுமென்றும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் தேர்தலுக்கு முன்பு களையப்பட வேண்டு மென்றும் பாதுகாப்பு ஸ்திரப்படுத்தப்படவேண்டுமென்றும் அரசாங்கத்தை கோரவும் இப்பேச்சுகளின் போது தீர்மானிக்கப்பட்டது.

விசேடமாக அம்பாறை மாவட்டத்தில் வாபஸ் பெறப்பட்ட விசேட அதிரடிப்படையினரை மீண்டும் அங்கு நிலை கொள்ளச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கைய்ய நிறைவேற்ற வேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்தவும் இப்பேச்சுவார்த்தைகளின் போது தீர்மானிக்கப்பட்டது. (அ-5)

# ஆசிய மத்திய கிழக்கு நாடுகளுக்கான மாநாட்டில் அமைச்சர் ரோஹித போகொல்லாகம பங்கேற்பு

(கொழும்பு)

ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான இரண்டாவது மாநாட்டில் வெளிவிவகார



அமைச்சர் ரோஹித போகொல்லாகம கலந்து கொள்ளவுள்ளதாக அவ்வமைச்சு அறி வித்துள்ளது.

இந்த மாநாடு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி, 6 ஆம் திகதிகளில் எகிப்தில் நடைபெறவுள்ளது. இதன் முதலாவது மாநாடு 2005ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்றது. ஆசிய மற்றும் மத்திய கிழக்கு வலய நாடுகளுக்கிடையில் கூட்டுறவை மேம்படுத்துவது இந்த மாநாட் டின் பிரதான நோக்கமாகும். இராஜதந்திர மட்டத் தில் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதே இந்த மாநாட்டில் இலங்கை கலந்துகொள்வதற்கான பிரதான நோக்கமாகும். வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இது தொடர்பான விசேட உரையொன்றை இம்மாநாட்டில் நிகழ்த் தவுள்ளார்.

இந்த வலய நாடுகளின் முதலீட்டையும் இலங்கை எதிர்பார்த்துள்ளது. இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் வெளிநாடுகளின் அமைச்சர்களுடனும் அமைச்சர் ரோஹித போகொல்லாகம பேச்சுவார்த்தை மேற்கொள்ளவுள்ளார்.

அத்துடன் பயங்கரவாதத்துக்கு எதி ரான உரையொன்றையும் இந்த மாநாட்டில் அமைச்சர் நிகழ்த்தவுள்ளதாகவும் வெளி விவகார அமைச்சு அறிவித்துள்ளது.(அ-5)

# அனுசரணையாளர்களான நோர்வே தரப்பு கிளிநொச்சி செல்ல அனுமதி வழங்கப்படவேண்டும்

## ஐரோப்பிய ஒன்றிய வதிவிடப் பிரதிநிதி ஜூலியன் வில்ஸன் வலியுறுத்தல்

(கொழும்பு)

நோர்வே தூதுவர்கள் ஐக்கியநாடுகள் சபை நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு சென்றுவருவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜூலியன் வில்ஸன் தெரிவித்தார்.

தேசிய சமாதான பேரவையினால் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட தூதுக்குழுவினர் பல அவதானங்களை வெளியிட்டிருந்தனர். அவர்களது செய்தியானது யுத்தநிறுத்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய நிலைப்பாட்டை தெளிவாக எடுத்து விளக்குகின்றது. ஐரேப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் இலங்கையின் நண்பனாகவே திகழ்கின்றது.

நண்பர்கள் மாத்திரமே ஐரேப்பிய ஒன்றியம் வழங்குகின்ற அளவிற்குஆதரவை வழங்க முடியும்.

அவை பில்லியன்கள் பெறுமதியான வர்த்தக சலுகைகள், நூற்றுக்கணக்கான மில்லியன்கள் பெறுமதியான உதவிகள் இலங்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு வின் பிரசன்னத்தை வலுவூட்டியுள்ளமை இந்த முயற்சியில் பங்கேற்பதும் நட்புறவின் செயற்பாடுகளாகும். ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக் குழுவினர் பல்வேறு கரிசனைக்குரிய விடயங்களை தமது விஜயத்தின் இறுதியில் சுட்டி காட்டியிருந்தனர்.

இந்த கரிசனைக்குரிய விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென நாம் விரும்புகின்றோம். ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினர் மனிதாபிமான விடயங்களிலும் மனித உரிமைகள் விடயத்திலும் கவனம் செலுத்தினர். சர்வகட்சி குழுவினரின் எதிர்பார்ப்பு நிறைந்த இறுதி அறிக்கையை நோக்கிய விடயங்களிலும் கவனம் செலுத்தினர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்படுகின்ற 17 பாரதூரமான மனித உரிமை மீறல்கள் விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பிலும் அவதானம் செலுத்தியுள்ளனர்.

அனுசரணையாளர்களான நோர்வே தரப்பினர் கிளிநொச்சி சென்று வருவதற்காக அனுமதி வழங்கப்படல், ஐக்கிய நாடுகள் சபை நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவ னங்கள், செஞ்சிலுவைக்குழு ஆகியவற்றுக்கான சாதகமான ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும். (அ-5)

# டெஸ்ட் வரலாற்றில்

# மேற்கிந்தியத் தீவுகள் மண்ணில் இலங்கை அணிக்கு முதல் வெற்றி



சமிந்த வாஸின் துல்லியமான வேகத்தில் மேற்கிந்திய தீவுகளின் விக்கெற் சரிய இலங்கை அணி முதலாவது டெஸ்டில் 121 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி மேற்கிந்தியத் தீவுகள் மண்ணில் தனது முதலாவது வெற்றியைப் பெற்றுச் சாதனை படைத்தது.

இதற்கு முன் இரண்டு முறை மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி இரண்டு முறையும் தோல்வியையே தழுவியிருந்தது.

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 22ஆம் திகதி ஹயானாவில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெற்றுக்களையிழந்து 476 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்தனா 136 ஓட்டங்களையும் வர்ணபுர 120 ஓட்டங்களையும் வாஸ் ஆட்டமிழக்காமல் 54, வான்டொட் 52 மற்றும் சங்கக்கார 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரெய்லர் 4 விக்கெற்றுக்களையும் ஹைல் 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர். தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 280 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெற்றுக்களையுமிழந்தது.

இதில் சர்வான் 80 ஓட்டங்களையும் ராம்டீன் 38, ஹைன்ட்ஸ் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வாஸ், மிராண்டோ மற்றும் முரளிதரன் ஆகியோர் தலா 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 196 ஓட்டங்களால் முன்னிலை வகித்த இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 7 விக்கெற்றுக்களையிழந்து 240 ஓட்டங்களை எடுத்த போது தனது ஆட்டத்தை இடைநிறுத்தி மேற்கிந்திய தீவுகள் அணிக்கு வெற்றி இலக்காக 437 ஓட்டங்களை நிர்ணயித்தது.

துடுப்பாட்டத்தில் வர்ணபுர 62 ஓட்டங்களையும் சமரவீர ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும் மற்றும் மஹேல ஜெயவர்தனா 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பென் 3 விக்கெற்றுக்களையும் பிரவோ 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்கு 437 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 4ஆம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெற்றையிழந்து 96 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஐந்தாவதும் இறுதி நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு இரண்டாவது விக்கெற்றுக்காக ஜோடி சேர்ந்த பிரவோ , சர்வான் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இருவரும் இணைந்து 134 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் பிரவோ 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய சாமுவேல்ஸ் 10, சந்தர்போல் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மேற்கிந்திய தீவுகள் அணி 78 ஓட்டங்களை எடுத்த நிலையில் 4 விக்கெற்றுக்களையிழந்து தடுமாறியது.

அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் நிதானமாக ஆடிய போதும் மறுமுனையில் சிறப்பாக ஆடிய சர்வான் 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஹைன்ட்ஸ் 10, ராம்டீன், பென் 7 ஓட்டங்களுடன் அட்டமிழக்க மேற்கிந்திய தீவுகள் அணி 244 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெற்றுக்களையிழந்த நிலையில் இலங்கை அணிக்கு வெற்றி உறுதியானது.





எனினும் 9ஆவது விக்கெற்றுக்காக ஹைடன் ஜோடி சேர்ந்த ரெய்லர் நிதானமாக ஆடி போட்டியை சமநிலையாக்க போராடினர்.

மறுமுனையில் ஹைல் சிறப்பாக ஆடி ஓட்டங்களை எடுத்தார். எனினும் ஆட்டம் நிறைவடைவதற்கு குறைந்தது மீதமாக 7 ஓவர்களே உள்ள நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணி 315 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெற்றுக்களையுமிழந்து 121 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் பிரவோ 83 ஓட்டங்களையும், சர்வான் 72 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஹைல் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சமிந்த வாஸ் 5 விக்கெற்றுக் களையும் முரளிதரன் 3 விக்கெற்றுக்களையும் மிராண்டோ 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்டில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக சமிந்தவாஸ் தெரிவானார். இரண்டாவது டெஸ்ட் எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை போர்ட் ஒப்ஸ் பெயினில் நடைபெறுகிறது. (5)

# தென்னாபிரிக்கா ஸ்திரமான நிலையில்; பதிலுக்கு இந்தியா சிறப்பான ஆரம்பம்



அம்லா

(சென்னை)

அம்லாவின் சிறப்பான சதத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 540 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையை அடைந்தது.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 82 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இத் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் சென்னையில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிபில் 4 விக்கெட்டுக்களையிழந்து 304 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

களத்தில் ஆட்டமிழக்காமல் அம்லா 85 ஓட்டங்களுடனும் டி வில்லியஸ் 10 ஓட்டங்களுடனும் இருந்தனர். போட்டியின் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அம்லா, பௌச்சர் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் அதன் முதலாவது இன்னிங்ஸில் 540 ஓட்டங் களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் ஹசிம் அம்லா 159 ஓட்டங்களையும் பௌச்சர் 70 ஓட்டங்களையும் டி வில்லியஸ் 44 ஓட்டங்களையும் எடுத்தனர். முன்னதாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சிமித் 73 ஓட்டங்களையும் மக்கன்சி 94 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 5 விக்கெட்டுக்களையும் கும்ளே 2 விக்கெட்டுக்களையும் மற்றும் சிறிசாந், சேவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சேவாக், ஜாபரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் சேவாக் 52 ஓட்டங்களுடனும் ஜாபர் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர். போட்டியின் மூன்றாம் நாள் இன்றாகும். (5)



சேவாக்

# சிக்கலில் மாட்டுவாரா இந்திய வீரர் சிறிசாந்?

(சென்னை)

சென்னை டெஸ்ட் போட்டியின் 2-வது நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்கத் துடுப்பாட்ட வீரர் டி வில்லியஸுடன் சொற்போரில் ஈடுபட்ட ஆக்ரோச வீரர் சிறிசாந் சிக்கலில் மாட்டும் வாய்ப்புள்ளது.

நேற்று முன்தினம் போட்டியில் சிறிசாந்துக்கு விக்கெட் எடுக்கும் வாய்ப்பு குறைவாகவேயிருந்தது. சென்னைச் சிதம்பரம் ஆடுகளம் சுழல் பந்துவீச்சாளர்களுக்கே சாதகமாக இருப்பதால் வேகப் பந்துவீச்சாளர்களுக்கு விக்கெட் எடுக்கும் வாய்ப்பு குறைவாகவேயிருந்தது.

இதனால் பொறுமையிழந்த சிறிசாந் நேற்றைய இரண்டாவது நாள் போட்டியில் சொற்போரில் ஈடுபட்டார். தென்னாபிரிக்கத் துடுப்பாட்ட வீரர் டி வில்லியஸ், கிறிஸில் நின்ற போது ஆக்ரோசமாக ஓடிச் சென்று அவரிடம் ஏதோ பேசினார்.

டி வில்லியஸ், சிறிசாந் வீசிய பந்தை பவுண்டறிக்கு அனுப்பித் துடுப்பால் பதிலடி கொடுத்தார். பின்னர் சிறிசாந் வீசிய பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்த டி வில்லியஸ் பெவிலியன் திரும்பினார்.

அவர் ஆட்டமிழந்தவுடன் சிறிசாந் அவரைப் பார்த்து முறைத்தபடி ஆக்ரோசத்துடன் கத்தினார். அந்த ஓவர் முடிபடைந்தவுடன் நடுவர் டோனி ஹில், சிறிசாந்துடன் ஏதோ பேசினார். சிறிசாந் மீது நடுவர் புகார் செய்தால் அவர் மீது போட்டி நடுவர் நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது. (5)

# சென்னை அணியை பிரபலப்படுத்தும் வீடியோப் படத்தில் விஜய் நடனம்



இந்தியன் பிரிமியர் லீக் 20 ஓவர் கிரிக்கெற் போட்டி ஏப்ரல்18 இல் தொடங்குகிறது. ஜூன்மாதம் வரை நடக்கிறது. 8 நகர அணிகள் பங்கேற்கின்றன.

இதற்காக கோடிக்கணக்கான ஏலத்தில் கிரிக்கெற் வீரர்கள் விலைக்கு வாங்கப்பட்டுள்ளனர்.

சென்னை அணிக்கு சென்னை சூப்பர் கிங்க்ஸ் என பெயரிட்டுள்ளனர். இந்த அணியை பிரபலப்படுத்தும் நட்சத்திர தூதுவர்களாக நடிகர் விஜய், நடிகை நயன்தாரா நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை அணிக்காகவீடியோ படம் தயாராகிறது. இதற்கு கவிஞர் வைரமுத்து கிரிக்கெற் பாடலொன்றை எழுதியுள்ளார். இதில் விஜய் நயன்தாரா நடனம் ஆடுகின்றனர். சென்னை அணியை பிரபலப்படுத்துவதற்கு இந்த வீடியோ படம் உதவும் என்று கருதப்படுகிறது.

இதற்கான படப்பிடிப்பு ஏ. வி. எம். ஸ்டுடியோவில் நடந்து வருகிறது. வீடியோப் படத்தில் நடிப்பது சந்தோஷமாக உள்ளது என்றார் விஜய்.

மணிசர்மா இசையில் உருவாகும் இந்த வீடியோப் படத்தை ராஜீவ் மேனன் இயக்கி ஒளிப்பதிவும் செய்கிறார். அவர் கூறியதாவது,

வீடியோப் படத்தை சிறப்பாக எடுக்க பணியாற்றி வருகிறோம். ஏப்ரல் வாரத்தில் இது தயாராகிவிடும்.



நட்சத்திர தூதுவர்கள் சென்னை கிரிக்கெற்அணிவீரர்கள் இந்த வீடியோ படத்தில் இடம்பெறுவர். முந்தைய எனது விளம்பரப் படங்களில் உணர்வு பூர்வமான விஷயங்கள் இருக்கும். அதுபோலவே இந்த கிரிக்கெற் வீடியோவிலும் நடிகர்கள் கிரிக்கெற் வீரர்கள், ரசிகர்களை இணைத்து காட்சிகள் இருக்கும். இவ்வாறு அவர் க்ூறினார். (அ-5)

# பிரிட்டிஷ் சொகுசுக் கார் நிறுவனங்களை இந்தியாவின் 'டாட்டா' வாங்கியது

இந்தியாவின் பிரபல வர்த்தகக் குழுமமான டாட்டா மோட்டார் நிறுவனம் பிரிட்டனிலுள்ள புகழ்பெற்ற கார் தயாரிப்பு நிறுவனங்களான ஜாக்குவார் மற்றும் லாண்ட் ரோவர் நிறுவனங்களை புதன்கிழமை வாங்கியது.

இந்த இரு நிறுவனங்களையும் அமெரிக்க கார் தயாரிப்பு நிறுவன [illegible]போர்ட் நிறுவனத்திடமிருந்து [illegible] பில்லியன் பவுண்ஸ்க [illegible]வாங்கியுள்ளது.

[illegible] நூற்றாண்டுக்கும் மேலாக [illegible]வில் பெரிதும் மதிக்கப்ப[illegible] நிறுவனமாக டாட்டா குழுமம் [illegible] வருகிறது.

[illegible] வாகனத் தயாரிப்பு, பெரிய [illegible]ல்கள், தொலைத் தொடர்பு [illegible] தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் சர்வதேச அளவில் தனது ஆளுமையை செலுத்தி வரும் ஒரு நிறுவனமாக அந்தக் குழுமம் திகழ்கிறது.

கடந்த ஜனவரி மாதம் உலகின் மிகக் குறைந்த விலையுடைய காரான நேனோவை அறிமுகப்படுத்தியது.

இந்தியா பிரிட்டிஷ் அரசில் ஒரு காலனி நாடாக இருந்தபோது அதாவது 19ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே டாட்டா தனது தொழிலை ஆரம்பித்து விரிவ்படுத்தத்தொடங்கியது.

தற்போது உலக அளவில், 80 நாடுகளில், 96 நிறுவனங்களை உள்ளடக்கி சுமார் 22 பில்லியன் டாலர்கள் அளவுக்கு வர்த்தகம் செய்யும் ஒரு நிறுவனமாக டாட்டா குழுமம் திகழ்கிறது. உலகளவில் டாட்டா குழுமத்தில்கிட்டத்தட்ட மூன்று இலட்சம் பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்.

உலக அளவில் பொருளாதார வல்லமை எப்படி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகர்கிறது என்பதற்கு, ஜாக்குவார் மற்றும் லாண்ட் ரோவர் நிறுவனங்களை டாட்டா மோட்டார்ஸ் வாங்கியது ஓர் உதாரணம் என் கிறார் பொருளாதார ஆசிரியர் ரோபர்ட் பெஸ்டன்.

சொகுசுக் கார்கள் என்று வரும் போது உலக அளவில் ஜாக்குவார் மற்றும் லரீண்ட் ரோவர் கார்கள் முத்திரை பதித்துள்ளன. உலகச் சந்தையில் ஜாக்குவார் கார் 75,000 பவுண்டுகளும், லாண்ட் ரோவர் 60,000 பவுண்டுகளுக்கும் விற்கப் படுகிறது. (அ-5)

# தாவரத்திலிருந்து எரிபொருள் தயாரிப்பு — இந்தியா கண்டனம் தெரிவிப்பு



உலக அளவில் உணவின் விலைகள் ஏறிக்கொண்டே இருப்பதை சமாளிக்க முடியாமல், உலகின் வறியவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், அமெரிக்கர் போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகள் தானி யங்களை மூலமாகக் கொண்டு எரி பொருள் தயாரிக்கும் திட்டங்களில்ஈடுபடுவது ஆத்திர மூட்டுவதாக இருக் கிறது என்று இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

சிங்கப்பூரில் ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றும்போது அமைச்சர் சிதம்பரம் இதைத் தெரிவித்தார்.

சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பொருளாதார விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு தான், மேற்குலக நாடுகள் தாவர மூலமான எரிபொருளைத் தயாரிப்பதில் தமது ஆர்வத் தை அதிகரிக்கத் துவங்கியுள்ளன.

நியாயமான விலையில், உணவுப் பொருட் களை வாங்குவதற்கு, உலக சனத்தொகையில், பெரும் பங்கு மிகவும் கஷ்டப்பட்டுவர, மலிவான எரிபொருள் கிடைப்பதற்காக சோளம் போன்ற தானியங்களை எரிபொருளாக மாற்றுவது கண்டிக்கப்பட வேண்டியது என்றும் அமைச்சர் சிதம்பரம் கருத்து வெளியிட்டுள்ளார். (அ-5)

# ...ரைவில் இந்திய-பாகிஸ்தான் அமைதிப் பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

...யாவுடன் அடுத்த சுற்று ... பேச்சுவார்த்தைக்கான ...த்து பரிசீலித்து வருவதாக ...ஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் கடந்த மாதம் நடைபெற்ற தேர்தல்களைத் தொடர்ந்து புதிய பிரதமராக யூசுப் ராசா கிலானி பதவியேற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம்பேசிய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் முகம்மது சாதிக், இந்தியாவுடன் அமைதிப் பேச்சு நடத்த புதிய அரசு தயாராக இருப்பதாகக் கூறினார்.

இந்தியாவுடன் ஏற்கனவே நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளைத் தொடரும் என்று பாகிஸ்தான் புதிய அரசு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கு இடையே உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பாகிஸ்தான பிரதமர் கிலானிக்கு எழுதிய கடிதத்தில் பிரதமர் மன்மோகன்சிங் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் பாகிஸ்தான் வெளியுறவு செய்தித் தொடர்பாளர் பேச்சுவார்த்தை குறித்து தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

## நிகழ்வுப் பதிவுகள்



உரும்பிராய் இந்துக்கல்லூரியின் 2008 ஆம்ஆண்டு இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் அன்ரனிபீற்றர் உரையாற்றுவதையும், அருகில் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.




இணுவில் பொதுநூலகம்–சனசமூக நிலையத்தின் புனருத்தாரண ஆறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் நகரும் இரத்த வங்கி பணியாளர்கள் இரத்தம் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.



சாவகச்சேரி– டிறிபேக் கல்லூரியில் பயிற்சிபெறும் கல்வியியல் கல்லூரி மாணவ ஆசிரியர்களால் நடாத்தப்பட்ட மருத்துவமுகாமில், பொதுசுகாதாரப் பரிசோதகர் மற்றும் ஆசிரியர்களால் மாணவர்களுக்கு சுகாதார விளக்கம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.




பருத்தித்துறை புனித மரியன்னை தேவாலய 125ஆவது ஆண்டு நினைவு மலர் வெளியீட்டு விழாவிலே யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத் துறைத் தலைவர் அருட்பணி கலாநிதி நா.வி.பிலேந்திரன் அடிகளார் உரையாற்றுவதையும், விழாத் தலைவர் அருட்திரு பயஸ் இருதயதாஸ் அடிகளார் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



சாவகச்சேரி நகர சபைக்கு விஜயம் செய்த வடக்கு மாகாணசபை உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் சபைச் செயலர் திருமதி கு.ஆறுமுகம், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி அ.வசந்தகுமார் மற்றும் சபை ஊழியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

பணக்காரனாக விரும்புகிறவன் - தன் மனச்சாட்சியை தன் பெட்டியினுள் வைத்துக் கொள்ள வேண்டும்.

- ஜேர்மன்

வலம்புரி

## நேர்முகப் பரீட்சை அழைப்புகளும் நம்பி ஏமாறும் நியமனங்களும்

அண்மையில் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை இடம்பெற்றது. இதற்கு எழுநூற்றிப் பத்துப் பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களிலிருந்தே இவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். இவர்களுக்கான வெட்டுப்புள்ளி நூறாக வரையறுக்கப்பட்டிருந்தது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் முகாமைத்துவ உதவியாளர் பதவி தமக்குக் கிடைக்கும் என ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால் நூற்றியொரு பேருக்கு மட்டுமே மேற்படி நியமனம் கிடைத்தது. அப்படியாயின் நியமனம் பெறுவோரில் ஏழு மடங்கானோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

நூற்றியொரு பேருக்கு நியமனம் வழங்குவதற்காக எழுநூற்றிப் பத்துப் பேரை நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதென்பது நியாயத்துவமான செயல்போல் தெரியவில்லை.

நியமனம் வழங்கப்படும் எண்ணிக்கையின் இரட்டிப்பான எண்ணிக்கையினரை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தால் கூட ஓரளவுக்கு அதனை நியாயமானதெனக் கூறலாம்.

நேர்முகப் பரீட்சைக்கு அதிக எண்ணிக்கையினரை அழைப்பதால்,

(I) அவர்கள் தமக்கு நியமனம் கிடைக்கும் என நம்பி ஏமாறும் நிலை

(II) கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் அதற்குப் பிரதேச செயலாளரின் ஒப்பம் பெறுதல் என்ற நடைமுறை அலைச்சல், ஏனைய நற்சான்றிதழ்கள், தகைமைச் சான்றிதழ் அவையாற்றினதும் .போட்டோப் பிரதிகள் என அலைச்சலும் வீண் செலவுகளுமாக எல்லாமே தேவையற்ற வேலை என்பதாகி விடுகின்றது.

இதற்கு அப்பால் நேர்முகப் பரீட்சையின் போதான நேர விரயம். நேர்முகத் தேர்வின் போது இயல்பாக ஏற்படக் கூடிய மனப் பதற்றம் இவை மேலதிகமானவையாகும்.

எனவே நேர்முகத் தேர்வு விடயத்தில் எல்லோரையும் அழைக்கும் முறையை மாற்றிப் பொருத்தமான - பொதுவான நியம எண்ணிக்கையினரை அழைக்கும் முறைமையை நடைமுறைப் படுத்த வேண்டும்.

அண்மையில் பாடசாலை அதிபர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெற்றபோது போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் தமக்கு அதிபர் நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காலம் கழிக்கின்றனர். இன்னும் சிலர் தாம் 'அதிபர்' என்ற பிரமையில் செயற்படுவதான தகவல்களும் உண்டு.

இத்தகைய சம்பவங்கள் மனித சிந்தனைகளைச் சிதறடிப்பதாகவும் மனித செயற்றிறனில் எதிர்த்தாக்கம் விளைவிப்பதாகவும் இருப்பதால் இது விடயத்தில் ஓர் பொதுவான நியதியை அரசு கடைப்பிடிப்பது அவசியமாகும்.

# 13ஆவது திருத்தத்தை விடவும் கூடிய அதிகாரப்பகிர்வொன்று தேவை

## கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ன

(கொழும்பு)

13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டியது அவசியமாக விருக்கின்ற போதிலும் இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு இது முழுமையான தீர்வாக அமையாது எனவும் அதனை விடவும் கூடிய அதிகாரப்பகிர்வொன்று அவசியம் எனவும் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ன தெரிவித்துள்ளார்.

'தேசிய சமாதான பேரவையினால் ஏற் பாடு செய்யப்பட்டிருந்த தேசியப் பிரச்சினையும் 13ஆவது திருத்தமும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்தின் மூலம் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த நேரத்தில் மாகாண சபைகளின் கீழ் உள்ள சுமார் 200ற்கும் மேற்பட்ட விடயங்கள் மாகாண சபைகளினால் நடை முறைப்படுத்தப் படாமலுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாணசபைகளில் சட்டமூலங்களை உருவாக்கக்கூடியோர் தற்போதைக்கு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு



பெரும்பான்மை அவசிய மில்லை யென்றதொரு கருத்தும் நிலவிவருகிறது.

அத்துடன் தேவையான சட்ட மற்றும் அடிப்படை வேலைத் திட்டங்களை மாகாண சபைகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு முன்னர் மத்திய அரசாங்கமே அவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என்றார் ஜயம்பதி விக்ரமரட்ண.

அதேவேளை வெற்றிகரமான அதிகாரப் பகிர்வை நோக்கிய அரசியல் மற்றும் நிர்வாகக் கலாசாரம் இலங்கையில் கட்டியெழுப்பப்படவேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார். (அ-5)

# பலஸ்தீன ஜனாதிபதியுடன் இலங்கைப் பிரதமர் பேச்சு!

மத்திய கிழக்கு நாடுகளுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இலங்கைப் பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க நேற்று முன்தினம் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ்சை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.



இப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க முன்னர் பலஸ்தீன முன்னாள் தலைவர் யாசிர் அரபாத்தின் அடக்கஸ்தலத்திற்கு பிரதமர் விஜயம் செய்தார். மத்திய கிழக்கின் தற்போதைய சமாதான முயற்சிகள் பற்றி விபரித்த மஹ்மூத் அப்பாஸ் , இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பலஸ்தீன மக்கள் உயர்ந்த மதிப்பளிக்கின்றனர் என்றும் ரமலாவின் வீதி ஒன்றுக்கு ஜனாதிபதியின் பெயர்சூட்டப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

ரமலாவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இலங்கைப்பிரதிநிதிகள் காரியா லயத்தில் பலஸ்தீன வர்த்தகர்கள் பலரையும் பிரதமர் சந்தித்து கலந்துரையாடினார். அடுத்ததாக ஜோர்தானுக்கு விஜயம் செய்ய பிரதமர் திட்டம் இட்டுள்ளார் என்றும் ஜனாதிபதி செயலகம் மேலும் அறிவித்துள்ளது. (அ-5)

# கிராம அலுவலர் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

பரீட்சைத்திணைக்களத்தால் 2007 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கிராம அலுவலர் தரம் 11க்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றியதாகவும் அனைவருக்கும் பெறுபேறு கள் அனுப்பிவைக்கப்படும் என்றும் பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

நேர்முகத்தேர்வில் பெறப்பட்ட புள்ளிகளும் எழுத்துப்பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளும் சேர்க்கப்பட்டு தகுதியான விண்ணப்பதாரிகளின் பெயர்கள் உடனடியாக பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும். அடுத்த இருவாரங்களுக்குள் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ-5)

# அதிபர், ஆசிரியர் சம்பளம் தொடர்பான கலந்துரையாடல் 2ஆம் திகதி நடைபெறும்

## ஆணைக்குழுச் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கான சம்பளம் குறித்து மற்றுமொரு பேச்சுவார்த்தை அடுத்தமாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த பேச்சு வார்த்தை நேற்று நடைபெற இருந்ததாகவும் தவிர்க்க முடியாத காரணத்தால் அடுத்த மாதம் 2ஆம் திகதிக்கு பிற்போட்டுள்ளதாகவும் சம்பள மற்றும் ஊழியர் புள்ளி விபர ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் கே.எல்.எல்.விஜயரட்ண தெரிவித் துள்ளார்.

அதிபர், ஆசிரியர்கள் சம்பளங்கள் குறித்த ஆணைக்குழு அமைச்சரவைக்கும் அறிக்கை யொன்றை சமர்ப்பித்திருந் தது. இதன் பிரதிகள் கல்வித்துறையிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் குறித்து தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் இது குறித்து மேலும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்திலுள்ள சம்பள மற்றும் ஊழியர் புள்ளி விபர ஜனாதிபதி ஆணைக்குழு அலுவலகத்தில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

(அ-6)

# வெள்ளி நற்சிந்தனை 13

# பக்தியின் மொழி தமிழ்

## கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

ஒன்றையே நினைத்து வாழும் பக்குவமுடையோரும் இவ்வுலகில் உளர். இறைவனைப் பற்றியே எண்ணும் பக்திநெறி வயப்பட்டவரின் செயற்பாடுகள் சற்று வேறு பட்டவை. அவர்களுடைய பக்திப்பரவச நிலையில் எல்லாவற்றையுமே மறந்து இறைவனோடு ஆழ்ந்துவிடும் இயல்புதான் தனித்துவமானது. இறைவனையடைய வேண்டும் என்ற நினைப்பால் பாவனை செய்து அவனை யடைய முயலும் பக்தர்களும் உளர். இத்தகைய பக்திவயப்பட்ட பெண்ணொருத்தியின் செயற்பாடு எத்தகையது என்பதைத் திருநாவுக்கரசர் 'திருக்கழிப்பாலை' என்னும் திருத்தலத்தைப் பற்றிப் பாடும் போது குறிப்பிட்டுள்ளார்.

இறைவனுடைய வண்ணத்தையோ வடிவத்தையோ சென்று அவள் காணவில்லை. அவனைப்பற்றி எண்ணி அவனுடைய பெயர்களைச் சொல்லி ஏத்திவழிபடவும் இல்லை. செய்ய மேனியிலே வெண்ணிறத்தவனுடைய நினைப்பிலே தன்னை மறந்து நிற்கி

நஞ்சை உகந்து உண்ட திருக்கழிப்பாலையிலே உறைகின்ற பிரானுடைய திருவடி பற்றிய எண்ணத்தால் அவள் நெஞ்சம் நிறைந்து கிடக்கிறது. அத்தகைய பக்தி பரவசத்தில் இருப்பவனை ஒன்றும் செய்ய முடியாது. இறைவனே அவனுடையதன்மையை அறிந்தவன். அவனை நல்வழிபடுத்துவான்.

பெண்களுடைய பக்திவசப்பட்ட நிலையைப் பலபாடல்களில் நாவுக்கரசர் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். இறைவனுடைய வேறுபட்ட திருக்கோலங்களையெல்லாம் மனத்திலே அவர்கள் வரைந்து வைத்துள்ளனர். செம்மொழித்தமிழில் அக்கோலங்களை அவர்கள் காணும் நிலையில் திருநாவுக்கரசர் எடுத்துரைக்கின்றார். கங்கையைச் சடையில் வைத்தவன் மலைமகள் நங்கையையும் உடன் வைத்திருப்பவன். திங்களையும் சூடி இருப்பவன். இறை சேர்ந்த கண்டன். அனலேந்திய கையன். 'செய்யமேனியன்' என இறைவன் தோற்

வழிபடும் பாங்கு எல்லோரது உள்ளத்திலும் ஒரு கசிவை ஏற்படுத்துகின்றது. அதுவே பக்திநெறியின் ஊற்றாகும்.

இத்தகைய தன்னளவான வழிபாடு இளையவர்களை ஈர்க்கக்கூடியது. வண்ணச் சித்திரங்களின் வடிவில் திருக்கோயில்களிலும் மண்டபங்களிலும் இதனைத் தீட்டி வைப்பதால் மக்கள் மனதில் அழகுணர்வு தோன்றி அதன்வழியே கவனத்தை ஈர்க்கும். அது முடிவில் இறைவனோடு இணைய வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். வழிபாடு ஆடலும் பாடலும் இணையும்போது பொது வழிபாடாகமாறிவிட்டது. தனிப்பட்ட வாழ்வியலில் இருந்து பொது வாழ்வியல் நெறியான பக்தி நெறியை ஊற்றெடுக்க வைத்தது.

'மருந்துவாள வருய்ய நஞ்சுண்டுக
திருந்தவன் கழிப்பாலையுளெம்பிரான்
திருந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்

# மகேஸ்வரன் எம்.பியின் படுகொலை வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

## சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரனின் படுகொலை வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை, நேற்று கொழும்பு பிரதம நீதிவான் ரவீந்திர பிரேமரட்ண முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மகேஸ்வரன் எம்.பியின் படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முதலாம் இரண்டாம் சந்தேக நபர்களான கொலின் வெலன்டைன் மற்றும் பிரான்சிஸ் சுதர்சன் ஆகியோர் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணையின்போது மன்றில் ஆஜரான குற்றத் தடுப்புப் பொலிஸார் படுகொலை தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாகவும் நீதிவானின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதனையடுத்து வழக்கு விசாரணையினை எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை வரை ஒத்திவைத்த நீதிவான் சந்தேகநபர்கள் இருவரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ் வரர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது மகேஸ்வரன் சுட்டுக்கொல்லப் பட்டிருந்தார்.படுகொலை தொடர்பாக ஐந்து பேர் கைது செய்யப்பட்டிருந்தபோதும் மூவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

# கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று முதல் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மே மாதம் நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண சபையின் முதலாவது தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று ஆரம்பமானது.

மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இருந்து 37 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நடைபெறும் இத்தேர்தலுக்கான வேட்பு மனுக்களை அடுத்த வியாழக்கிழமை வரை மர்வட்ட செயலகங்களில் தாக்கல்செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இத்தேர்தலையொட்டி வீதித்தடைகளும் வீதிச்சோதனைகளும் அதிகரிக்கப்பட்டு பாதுகாப்பு உயர்த்தப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்படும் 35 உறுப்பினர்களுடன் கூடுதல் வாக்குகளைப் பெறும் கட்சி அல்லது சுயேட்சைக்குழுவுக்கு போனஸ் உறுப்பினர்கள் 2 பேர் என மொத்தம் 37 உறுப்பினர்களைக் கொண்ட இச் சபைக்கான தேர்தலின் போது 9 இலட்சத்து 82ஆயிரத்து 728பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள்.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு 1988ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல்கள் நடைபெற்றன.

இதைத் தொடர்ந்து திருகோணமலையில் வரதராஜப்பெருமாள், ஒருங்கிணைந்த அந்த மாகாணசபையின் முதலமைச்சராக பதவியேற்றார்.

அவர் தலைமையிலான மாகாண சபையின் ஆட்சி மன்றம் சுமார் ஒருவருடகாலம் செயற்பட்டது. அதன் பிறகு இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையின் நடவடிக்கைகள் முடங்கிப்போயின.

• இதனிடையே கடந்த ஆண்டு இலங்கையின் உச்ச நீதிமன்றம் வடக்கையும் கிழக்கையும் தனித்தனியாகப் பிரிக்கவேண்டும் என அளித்த தீர்ப்பை அடுத்து இவை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களாக பிரிக்கப்பட்டன.

இவ்வாறு பிரிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணசபைக்கான முதல் தேர்தல் வரும் மே மாதம் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே மாகாணசபைக்கு வழங்கப் பட்டிருந்த அதிகாரங்கள் மத்திய அரசுகளினால் படிப்படியாக பறிக்கப்பட்டிருப்பதாக் கூறும் வட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினராக எஸ்.எஸ்.எம்.ஹனீபா நடைபெறவிருக்கும் தேர்தல், முதலமைச்சர் தெரிவுக்கான ஒன்றாகவே தான் நோக்குவதாகக் குறிப்பிடுகின்றார்.

(ச)

## இரணைமடு...

கடலை அண்டிய வலைப்பாடு பகுதி யிலுள்ள விடுதலைப் புலிகளின் மற்றொரு முகாம் மீதும் தாக்குதல் நடத்தப் பட்டிருப்பதாகவும் ரேடார் கட்டமைப்புகளில் ஈடுபடும் தளம் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் விமானப்படை பேச்சாளர் கூறியுள்ளார்.

இத்தாக்குதலுக்கு கிபீர் மற்றும் எம்-07 ரக விமானங்கள் பயன்படுத்தப்பட்டதாக விமானப்படை தெரிவித்துள்ளது. இதேவேளை மணலாறு ஜனகபுர பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார கூறியுள்ளார். (ச-5)

## ஐ.நாவின் ...

கோரப்படும் என கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 60/250 சரத்துக்கு அமைய உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தமது நாடுகளில் மனித உரிமைகளை அமுல்படுத்தியிருப்பது தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய காலாண்டு ஆய்வுகளைச் சபையில் சமர்ப்பிக்க வேண்டும்.

எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி முதல் 16ஆம்திகதி வரையான காலப்பகுதியில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இலங்கை கடந்த மாத இறுதியில் இந்த அறிக்கையை சமர்ப்பித்து விட்டது. அண்மையில் நடைபெற்று முடிந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் கூட்டத் தொடரில் பங்குபற்றியிருந்த பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் இலங்கையில் அதிகரித்திருக்கும் மனித உரிமைகள் தொடர்பாக கவனம் செலுத்தியிருந்தனர்.

(ச-5)

## முஸ்லிம் கட்சிகளிடையே...'

முன்வரவேண்டும் எனும் கோரிக்கை ஏற்பாட்டாளர்களால் முன்வைக்கப்பட்டதாகவும் எனினும் மரச்சின்னத்திலேயே போட்டியிடவேண்டும் எனும் கோரிக்கையினை தமது கட்சி முன்வைத்ததாகவும் இதற்கு ஏனைய முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் இணங்கவில்லை எனவும் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

மரச்சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஏனை முஸ்லிம் கட்சிகள் முன்வருமாயின் அது குறித்து யோசிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் கட்சிகளை ஒன்றிணைத்து பொதுவான சின்னமொன்றின் கீழ் போட்டியிடச் செய்வது தொடர்பாக இதற்கு முன்னர் நடைபெற்ற கூட்டமொன்றில் 'அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையிலான நு.ஆ.கட்சி தமது கட்சியின் சின்னத்தின் கீழ் போட்டியிட முன் வருமாறு அழைத்திருந்தது.

இவ்வேண்டுகோளை முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட ஏனைய முஸ்லிம் கட்சிகள் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் முஸ்லிம் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைந்து பொதுவான சின்ன மொன்றின் கீழ் போட்டியிடுமாறு கோரி தென்கிழக்கு பல்லைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

முஸ்லிம்களின் வாக்குகளை சிதறடிக்கச் செய்யாது அனைத்து முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமெனவும் அவர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தின்போது வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-5)

## 'பிரபாகரன்' திரைப்பட...

'பிரபாகரன்' என்றதனது திரைப்படத்தின் இறுதிக்கட்ட எடிட்டிங் வேலைகள் சென்னை ஜெமினி ஸ்ரூடியோவில் மேற்கொள்ளப் பட்டிருக்கும்போதே சுமார் 200க்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் தனக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் பின்னர் தன்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் குற்றம்சாட்டியுள்ள இவர், தனது படச்சுருள்களும் பிரதி களும் இந்தியத் திரைப்படத் தொழிலாளர் சங்கத்தால் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இந்திய அரசும் இலங்கை அரசும் இதில் உடனடியாகத் தலையிட்டு தனது படச்சுருள்களை தனக்கு மீளப்பெற்றுத்தரும் வரை தனது சாகும்வரையான உண்ணா விரதப் போராட்டம் தொடரும் என அவர் தெரிவித்தார்.

தனது படம், தமிழர்போராட்டத்தை கொச்சைப்படுத்தவில்லை என்றும் இது தமிழர் விரோதத் திரைப்படம் அல்ல எனத் தெரிவித்த பீரிஸ் 30 வருட யுத்தத்தில் அதிகம் பாதிக்கப் படுபவர்கள் சிங்கள, தமிழ் பாமர மக்களே என்பதனை எடுத்துக்காட்டுவதையே தனது நோக்கமாகக் கொண்டுள்ளது என விளக்கமளித்தார்.

(ச)

## 'பிரபாகரன்' படத்தை...

இலங்கையில் தமிழர்களை அவமதிக்கும் படம் இது. வன்மையாக இப்படத்தைக் கண்டிக்கிறோம் என்றார்.

பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கூறியதாவது, படத்தின் தொடக்கத்தில் இலங்கை அரசுக்கும் இலங்கை பாதுகாப்பு அமைச்சிற்கும் நன்றி என்று இடம்பெறுகிறது.

அத்துடன் படத்தில் ஒரு காட்சியில் கூட ஒரு சிங்களப் படைத் தளபதியோ, படையைச் சேர்ந்தவரோ இடம் பெறாமையிலிருந்தே இந்தப் படத்தின் நோக்கம் தெரியவருகிறது. படைதான் ஒடுக்கி அடக்கி வருகிறது. ஆனால் வரலாற்றையே தலைகீழாய் மாற்றி சிங்கள மக்கள் பாதிக்கப்படுவதுபோல் சித்திரிப்பது ஒரு பெரிய மோசடி.

மேலும் சமாதான நடவடிக்கைகளை போலி சமாதானம் என்று இப்படத்தில் நிராகரித்திருப்பதன் மூலம் படம் எடுத்தவரின் நோக்கம் என்ன என்பதை தெரிந்து கொள்ளலாம் என்றார்.

இயக்குநர் சீமான் கூறுகையில், தமிழர்களைக் கொச்சைப்படுத்தும் சிங்களப் படத்தை தடுக்கின்றபோது படைப்பு சுதந்திரம் பற்றி சிலர் பேசுகின்றனர். 'காற்றுக்கென்ன வேலி' தடுக் கப்பட்டபோது படைப்புச் சுதந்திரம் பற்றி பேசினார்களா?

தமிழர்களை இழிவு படுத்தும் போதுதான் படைப்புச் சுதந்திரம் பற்றி பேசுவார்களா என்றார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், கவிஞர்கள் மு.மேத்தா, பொன். செல்வகணபதி, தமிழ்முழக்கம் சாகுல்ஹமீது உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தமிழின உணர்வாளர்கள் முன்னிலையில் இப்படம் காண்பிக்கப்பட்டது.

(எ-5)

## புலிகளுடன் ஒப்பந்தம் ...

அவர் மேலும் கூறுகையில்,

விடுதலைப் புலிகள் தாம் பேச்சுவார்த்தைக்கு தயார் என தமது இணையத்தளங்களின் மூலம் வெளியிட்டாலேயே அதனை ஏற்று பேச்சுவார்த்தைக்குச் செல்ல அரசாங்கம் தயாராகவுள்ளது.

ஆனால் அவர்களுடன் போர் நிறுத்த உடன்படிக்கையொன்றை செய்ய நாம் தயாரில்லை.

அவ்வாறு நாம் விடுதலைப் புலிகளுடன் மீண்டுமொரு போர் நிறுத்த உடன்படிக்கையை செய்தால் அரசாங்கத்தை சிங்கள மக்கள் விரட்டியடிப்பார்கள்.

மத்தியஸ்தமாக வெளிநாடு ஒன்றை நாட நாம் தயாரில்லை. அத்துடன் கிளிநொச்சிக்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழுவொன்றை விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு தூதுவிடவும் அரசாங்கம் தயாரில்லை என்றார். (ச-5)


**SPECIAL ENGLISH CLASS**
**(100 HOURS INTENSIVE COURSE)**
**LONDON ENGLISH**

100 மணித்தியாலங்களில் ஆங்கிலம் பேச-எழுத-வாசிக்க-
நவீன முறையில் இலகுவாக கற்கலாம்.

- தினசரி வகுப்பு
- சனி-ஞாயிறு வகுப்பு
- ஆங்கில மொழியில் கல்வி கற்போர்-வெளிநாடு செல்வோர்-உத்தியோகம் பார்ப்போர் கற்கலாம்.
- அச்சடித்த பாடங்கள்
- வீடியோ பாடங்கள்.
- IELTS கல்வி

*Lectures By:* Mr.A.Rajagopalan, Mr.B.Ruban
ஆரம்பம்: 31.03.2008

JAFFNA TECHNICAL INSTITUTE
45, CLOCK TOWER ROAD, JAFFNA
(PHONE: 222 3127)

(C-929)



நிகழ்வு -01

**இறப்பு என்பது முடிவு அல்ல**



அமரர் நந்தி (வாழ்நாள் பேராசிரியர் சிவஞானசுந்தரம்)
அவர்களின் 80-வது பிறந்த தின நினைவு ஒன்றுகூடல்
இடம்: கைலாசபதி கலையரங்கம் (யாழ்.பல்கலைக்கழகம்)
காலம்: 30.03.2008 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.30 -மதியம் 12.30
தலைவர்: செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் (அதிபர்/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**கருத்துரை வழங்குவோர்**

பேராசிரியர் நந்தி பற்றி...
பேராசிரியர் என்.சண்முகலிங்கன்
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
மருத்துவ ஆசானாக பேராசிரியர் நந்தி
பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்
(சிரேஷ்ட பேராசிரியர்/உயிர் இரசாயனவியல்துறை, யாழ்.மருத்துவபீடம்)
நந்தியின் இலக்கியப் பணிகள்
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
(தலைவர்/தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
நந்தியின் ஆன்மீகப் பணிகள்
வைத்திய கலாநிதி க.சிவனேசன்
(வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)

**இறுவெட்டு வெளியீடு**

பேராசிரியர் நந்தியின் 'குட்டிகளுக்கு பாட்டுக்கள்'
*இசையமைப்பு:* அ.கேதீஸ்
*முதற்பிரதி பெறுபவர்:* திருமதி சாந்தி சிவஞானசுந்தரம்
*மதிப்பீட்டுரை:* திரு த.தவநாதன் றொபேட்
*செயல்திறன் அரங்க இயக்கத்தினர் பாடலுக்கான அபிநயம்*

*- பேராசிரியர் நந்தி அறக்கட்டளை*

(972)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.[illegible] இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.